திராவிடநாடு

11–12–60 | வார வெளியீடு | விலை 16 காசு

வளைகரத்தில் வாளெடுப்போம்!

—சுதா—

கூர்எயிறு வேங்கையினை எதிர்த்து நின்று
கூடைகொண்டு போராடி வென்றோ மன்று!
பார்புகழும் பாண்டியனின் முன்னே சென்று
பரல்காட்டி நீதியுரைத்தோம்! மாற்றார் தோற்க,
போர்க்களத்தில் வெற்றிபெறும் புதல்வர் பெற்று
புகழ்பெற்றோம்! புவியாண்டோம்! ஆனா லின்று
சீர்கெட்டு வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்!
சிந்தித்துப் பார்ப்பீர்!நம் வீரம் எங்கே?

விளைகின்ற நற்பயிரில் களையைப் போல
வீணர்களும் வாழ்கின்றார் நமது நாட்டில்!
களைந்திடுவோம் அவர்கொடுமை! தமிழைக் காப்போம்!
கல்நெஞ்சக் காரர்களாம் வடவ ரிட்ட
தளையுடைப்போம்! தனிநாட்டைக் காண்போம் வாரீர்!
தங்கையரே! தாய்மாரே! தமக்கை மாரே!
வளைகரத்தில் வாளெடுப்போம்! வெற்றி காண்போம்!
வரலாற்றி லிடம்பெறுவோம்! என்றும் வாழ்வோம்!

நல்லான்

மக்கள் புழக்கம் இல்லாத இடம் அது. அங்கே கூட்டம் கூடுகின்றது. தள்ளாத கிழவன் ஒருவன் நடுப்பாட்டையில் மாண்டு கிடந்தான். அடே அப்பா, எவ்வளவு குருதி! இந்தத் தள்ளாத கிழவன் உடலிற்கூட அவ்வளவு குருதி ஓடிக்கொண்டிருந்திருக்கிறதே! சற்றுத் தொலைவில் ஒற்றைமாட்டு வண்டியொன்று உருத்தெரியாமல் பொடிப்பொடியாகிக் கிடந்தது. அதற்குச் சற்று அப்பால் எருது ஒன்று குற்றுயிராய்—இல்லை; செத்துக்கிடந்தது.

அந்தக் கிழவன்தான் நல்லான் கிழவன். அவனைச்சுற்றி நின்றவர்கள், அவன் மக்கள்; மக்களின் மக்கள், உற்றார், உறவினர். அவர்கள் சும்மா நிற்கவில்லை. ஒப்பாரியைத் தூக்கிகொண்டு நின்றார்கள். எனக்குச் சிரிப்பு வந்தது. 'என்ன, சிரிப்பா வந்தது?' என்று கேட்கின்றீர்களா? ஆமாம். உயிரோடிருக்கும் வரை அந்த நல்லானைப்பற்றி அவனுடைய உற்றாரோ, சுற்றமோ அக்கறைகாட்டவில்லை. இப்போது வந்துவிட்டது; வந்துவிட்டன எல்லாமாக ஒன்று கூடி, அவன் இறந்த பிறகு ஒப்பாரி வைப்பதற்கு. வீட்டிற்கு ஒரு கவளமாகப் போட்டிருந்தாற்கூடப் போதும். அவன் வாழ்வு நடந்தேறி இருக்கும். வீட்டோடு இருந்து, இறந்து போயிருப்பான். அப்போதெல்லாம் அவனைப்பற்றி நினைக்கவே இல்லாமல், அவன்படும் வேதனையையும்; துன்பத்தையும் மனத்தில் போட்டுக்கொள்ளாமல் அசட்டையாக இருந்துவிட்டு, இப்போது ஒப்பாரி வைக்கிறது அந்தக் கும்பல் — அந்தக் குடும்பம். அந்தக் குடும்பம்மட்டும் என்ன, இந்தச் சமகமே அப்படித்தான்!

'குட்டிச்சுவரில் மோதிக்கொள்ள வெள்ளெழுத்தா?' என்று வேடிக்கையாக் கேட்பார்கள்; வேறுவேறு பொருளில் சொல்லுவார்கள். நல்லான் கிழவனின் பார்வைக்கேடு வெள்ளெழுத்தில்தான் தொடங்கியது. அது மெல்ல மெல்ல முன்னேறி நெடுஞ்சுவரின் மீது கூட மோதிக்கொள்ளும் அளவு பெருகி விட்டது. மங்கிய பார்வையோடு கால்தடுமாற்றம், தலை தடுமாற்றத்தோடு அவன் உழைக்கத்தான் வேண்டியிருந்தது.

ஆண்டாண்டு காலமாக அவன் செய்து வந்த தொழில் வண்டி ஓட்டுவதுதான். முன்பெல்லாம் இரட்டைமாட்டு வண்டி ஓட்டுவான். பெரும்பார வண்டி ஓட்டுவான். வண்டி ஓட்டி, வண்டி ஓட்டித்தான் பெரியதொரு குடும்பத்தையே அவன் கட்டிக்காத்து வந்தான்.

❊ கனகு ❊

இப்போது முடியுமா பெரும்பார வண்டி, இரட்டை மாட்டு வண்டி ஓட்டுவதற்கு?

அந்த ஒற்றைமாட்டு வண்டிகூட இன்று, நேற்று வாங்கியதல்ல. எப்போதோ வாங்கியது. அவனுக்கே நினைவு இல்லை. எத்தனை ஆண்டுகளுக்கு முன்னே அது வாங்கப்பட்டது என்று. அந்த வண்டி அச்சு வளைந்த வண்டி. ஆரைக்கால் கலகலத்தது; ஏறுகால் தேய்ந்தது, கூண்டு சிதைந்தது. எனினும் அந்தக்கிழவனுக்கு அது பயன்பட்டுவந்தது, எப்படியோ!

அந்த வண்டியை இழுக்கும் மாடு எப்படிப்பட்டது தெரியுமா? நீண்ட நாள் உழைத்து, உழைத்து அந்தக் கிழவனைப்போல் களைத்துப் போன பேரெருது. ஆமாம், பெரியது;—முதியது என்ற பொருளில்;—பேருக்கு எருது. அந்த எருது கிழவனைப்போல் தளர்ந்துபோயிருந்தாலும், அதற்கு நல்ல கண் பார்வை இருந்தது. அதோடுகூட அந்த எருது காலம் எல்லாம் உழைத்து, உழைத்து — அப்படி மனிதரின் ஏவற்படி உழைக்கவிட்டால் என்ன நேரும் என்பதை எண்ணி, எண்ணிப், பட்டுப்பட்டு மரத்துப்போய்விட்ட உள்ளத்தை உடையது. (உள்ளம் என்ற ஒன்று அந்தவிலங்கிடம் இருந்திருக்குமோ என்னவோ!) ஆனால், உயிர் உள்ள வரையில் நல்லான் கிழவனுக்காக,—அவனுக்காகமட்டும்—உழைத்து விட்டுப் போகலாம் என்று உறுதி எடுத்துக்கொண்டு விட்டது போல் அது இயங்கி வந்தது.

நல்லான் இல்லாத வேளையில் பத்துப்பேர் சேர்ந்து தூக்கி நிறுத்தினாற்கூட எழுந்து நில்லாத அந்த எருது, நல்லானுடைய குரலைக் கேட்டதும், எப்படியோ முக்கி, முனகி, திணறித் தத்தளித்து பெரும்பாடுபட்டு எழுந்து நின்று கொள்கிறது. நல்லானுக்கு எவ்விதத் தொந்தரவும் கொடுக்கக் கூடாது என்பது அதன் நோக்கம் போலும்!

அந்த எருது நல்லான் மீது பேரன்பும், பெரும் பற்றும் வைத்திருந்தது என்று ஊரில் எல்லாரும் கூறுகின்றார்கள்.

பற்றுவது, பாசமாவது, அன்பாவது, ஒன்றுவது! அப்படி ஒன்றும்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ஏற்றம் குறைய....!

லர் 19] ஆண்டுச் சந்தா ரூ. 8. (11—12—60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 22

மக்களுக்கு இன்றியமையாது தேவைப்படும் உணவுப் பொருள்களின் விலையும், உணவை உண்டாக்கப் பயன்படுத்தும் விறகின் விலையும் நாளுக்கு நாள் ஏறியவண்ணம் உள்ளன.

இந்த விலை ஏற்றம் எப்படி உண்டாயிற்று? எதனால் உண்டாயிற்று? ஏன் உண்டாயிற்று? உண்மையாகவே இந்த விலை உயர்வுக்குக் காரணங்கள் யாதாயினும் உள்ளனவா? அப்படியிருந்தால், அந்தக் காரணங்களைக் கண்டறியவேண்டாமா? கண்டறிந்து, அவற்றிற்கான பரிகாரங்களைத் தேடவேண்டாமா? என்ற பொறுப்பும் கடமையும் அந்த நாட்டை ஆள்பவர்களுக்கு இயற்கையாகவே ஏற்படுவதில் ஆச்சரியம் ஏதும் இருக்கமுடியாது.

எனவேதான், தமிழ் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள விலை உயர்வுக்கான காரணங்களைக் கண்டறியவேண்டுமென்று விரும்பிய நமது மாநில நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள், முன்னாள் தில்லியில் அமைச்சராக இருந்தவரும், வியாபாரத் துறையில் நல்ல அனுபவம் உள்ளவருமான திரு. டி. டி. கிருட்டினமாச்சாரியார் அவர்களை உடன் அழைத்துக்கொண்டு, சென்னை நகரிலுள்ள பல்வேறு வியாபார நிலையங்களுக்குச் சென்று, விலை உயர்வுக்கான காரணங்களை அறிய முயன்றிருக்கிறார்.

அதிலும், தன்னை இன்னார் என்று மற்றவர்கள் அறிந்துகொள்ளக்கூடாதென்ற முன் ஏற்பாட்டுடன் சென்றிருக்கிறார்.

அந்தக் காலத்தில் அரசர்கள் மாறுவேடத்தில் சென்று நாட்டின் நிலைமைகளை அறிந்துவருவார்களாமே!

அந்த முறையை நமது அமைச்சரும் பின்பற்றியிருக்கிறார்.

இது உண்மையிலே வரவேற்கக்கூடியதுதான். பொருள் வாங்க வந்திருப்பவர் இன்னார் என்று தெரிந்தால், அதற்கேற்பப் பொருள்களின் விலையை ஏற்றியும் இறக்கியும் விற்பதுதான் நமது நாட்டின் இக்காலத்துப் பழக்கமாக மாறிவிட்டிருக்கிறதே! இதனை அமைச்சரும் உணர்ந்திருப்பதால்; மாறுவேடத்தில் சென்று, முதலில் ஒரு விறகு கடைக்காரரை அணுகி, விறகின் விலையை விசாரித்திருக்கிறார். அந்த வியாபாரி எடுத்த எடுப்பில் டன் ஒன்று ரூபா 100-00 என்று கூறினார். பின்னர், விலை விசாரித்தவர் சாதாரண ஆளல்ல, மாநில அமைச்சர் என்று தெரிந்ததும், "இல்லை, இல்லை டன் ஒன்று ரூபா 85—00 தான்" என்று விலையை இறக்கிக் கூறியிருக்கிறார்.

ஆனால், இது ஒன்றும் புதுமுறையல்ல, பழக்கப் பழக்கப்பட்டு வியாபாரிகள் பெரும்பாலாரின் குருதியோடு கலந்துவிட்ட ஒரு முறையாகும். இதனை, எந்த அமைச்சர் எந்த வேடத்தில் சென்றாலும் தடுத்து நிறுத்துவதென்பது அவ்வளவு எளிதாக முடியக்கூடிய காரியமல்ல.

ஆனால், நாட்டில் இப்படி விலைவாசிகள் ஏறிக்கொண்டு போவதற்கு உரிய முக்கிய காரணம் எது என்பதனைக் கண்டறிவதிலும், அதற்கான பரிகாரத்தைத் தேட முனைவதிலும் நாட்டை ஆளும் பொறுப்பில் இருப்போர் ஈடுபடவேண்டும். அப்போதுதான் அவர்கள் நாட்டுக்கு நன்மைசெய்ய முடியும்.

இத்துணைக்கண்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்கள், அதிலும், அன்றாடத் தேவைக்குப் பயன்படுத்தப்படும் காய்கறிகள், பழவகைகள் எந்த அளவுக்கு வீணாக்கப்படுகின்றன — பாழாக்கப்படுகின்றன என்ற உண்மையை, உணவுப் பொருள்பற்றிய ஆராய்ச்சி நிபுணரான டாக்டர் ஸ்டாகல் என்பவர் வெளியிட்டுள்ளார்.

> "இந்தியாவில் வீணாக்கப்படும் உணவுப் பொருள்கள் முழுவதையும் பயன்படுத்திக்கொண்டால், மக்கள் பெருகிவரும் இந்த நாட்டுக்குத் தேவைப்படும் உணவுப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கலாம்.
>
> விவசாயிகள் அறுவடை செய்யும் மொத்தக் காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றில் பாதிக்குமேல் வீணாகின்றன"

என்று கூறுகிறார். இப்படிக் கூறிவிட்டுத் தம் முடைய கடமை முடிந்துவிட்டதென்று அவர் போய்விடவில்லை.

வீணாக்கப்படும் உணவுப் பொருள்களை, அவை, வீணாகாதபடி பார்த்துக்கொள்வதற்கான முறைகளையும் கூறியுள்ளார்.

அந்த முறைகளை நமது நிதி அமைச்சரும் பத்திரிகைகளில் பார்த்திருக்கக்கூடும்.

எனவே, விலைவாசி உயர்வுக்கான் காரணங்களை அறிந்து, தக்க பரிகாரம் தேடியாகவேண்டும் என்ற ஆர்வத்தோடு, அத்துறையில் ஈடுபட்டிருக்கும் அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள், டாக்டர் ஸ்டாகல் தரும் ஆராய்ச்சி உண்மைகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் ஈடுபட்டால், இப்போதேற்பட்டிருக்கும் விலை உயர்வில் பாதியளவையேனும் குறைக்க வழி ஏற்படும் என்பதனை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

கொண்டிருக்க முடியாது அந்த எருதால். ஏதோ, நீண்ட நாள் பழகிவிட்ட பழக்கம், அல்லது இன்னும் சில நாள்,—அடிமாட்டுக் காரனிடம்போய் விரைவில் முடிவைக் கண்டுகொள்ளாமல்-உலகில் உலவலாம் என்ற ஆசை, இவற்றில் ஒன்றோ, அல்லது இரண்டுமோ அந்த எருதிடம் கப்பிக்கொண்டிருந்தன. அதனால்தான் அது முரண்டிக்கொள்ள வில்லை. ஏறுமாறு புரியவில்லை. எப்படியோ முடிந்த மட்டும் செயலில் ஈடுபட்டுக்கொண்டு வந்தது.

"வண்டிக்குப் பாரம் இருக்கின்றதா" என்று பழைய அறிமுகக்காரர்கள் ஒவ்வொருவரிடமும் போய்க் கேட்டுக்கொண்டு வருவான் நல்லான். அவர்களில் யாரேனும் ஒருவர்:

"உனக்குத்தான் கண் தெரியவில்லையே! உன்னால் நன்றாக நடக்கக்கூட முடியவில்லையே! உன்னை நம்பி எப்படிப் பாரம் கொடுப்பது?" என்று கேட்பது உண்டு.

அதற்கு நல்லானின் பதில் என்ன தெரியுமா?

"பயப்படாமல் கொடுங்கள். நான் கொண்டுபோய்ச் சேர்க்கப் போவதில்லை உங்கள் பாரத்தை. என்மாடு கொண்டுபோய்ச்சேர்த்துவிடும். என் மாடு உயிரோடு இருக்கும் வரை, என்னை நீங்கள் முழுக்க முழுக்க நம்பலாம். உங்கள் பாரத்துக்கு ஒரு கேடுமே வராமல் உரிய இடத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும் என் மாடு. இப்போதெல்லாம் வண்டியை நான் ஓட்டுவதே இல்லை. ஓட்டினைத்தாற்கூட ஒட்டுவதற்கு என் பார்வை இடமளிக்காது. போக வேண்டிய இடத்திற்குப் பழைய அனுபவத்தை வைத்துக்கொண்டு ஏதோ கோடி கட்டிவிடுவேன். ஏறுகால் மீது அமர்ந்திருப்பேன். அவ்வளவுதான் நான் செய்கின்றவேலை; மற்றவற்றை எல்லாம் என் மாடு கவனித்துக்கொள்ளும்; கவனித்துக்கொள்கிறது லாரி வந்தால் எப்படி ஒதுங்கவேண்டும், பஸ் வந்தால் எப்படி வழிவிடவேண்டும், நாற்சந்தியில எப்படிச் செல்லவேண்டும், மக்கள் கூட்டத்தை எப்படி ஒதுக்கிக்கொண்டு போகவேண்டும என்பனவெல்லாம் என் மாட்டுக்குத் தலைகீழ்ப் பாடம். அந்த மாடு என்னிடம் இருக்கும் வரை என்னை நீங்கள் நம்புங்கள். உங்கள் பாரத்தை எனக்கே கொடுங்கள் ஏற்றிச் செல்ல" என்பான் கிழவன்.

* * *

அன்றும் அப்படித்தான் உறுதியளித்தான். கொடுத்தவர்கள் அவன்மீது நம்பிக்கை வைத்தே கொடுத்தார்கள். அந்த எருதும் நம்பிக்கைக்கு உரியதாகவே நடந்துகொண்டுவிட்டது. அதில் ஒன்றும் தவறவில்லை. ஆனால்,

அன்று பாரம் கொண்டுசென்ற நேரமோ மாலைவேளை. எப்படிப் பார்த்தாலும் போய்விட்டுத் திரும்பும்போது நடுக்கூறு ஆகிவிடும். நல்லான் நினைத்திருந்தால், அன்று போகாமல் மறுநாள் போயிருக்கலாம். ஆனால், அவன் நிலை அதற்கு இடங்கொடுக்கவில்லை. இரண்டு நாட்களாகப் பாரமே கிடைக்கவில்லை. மாட்டுக்குத்தீவனம் இல்லை. வாங்குவதற்கு கையில் காசு இல்லை. வீட்டில் விளக்கேற்றக்கூட எண்ணெய் இல்லை. காலையில் புகைந்த அடுப்பு, மறுபடியும் புகைய வழி இல்லை. எல்லாமாகச் சேர்ந்து அந்த நேரத்தில் அவனைத் தள்ளிவிட்டன.

வண்டியைப் பூட்டினான்' பாரத்தை ஏற்றினான். மாடு இழுத்துக்கொண்டு போயிற்று.

திரும்பி வரும்போது எதிர்பார்த்தபடி நடுக்கூற்றுக்குமேல் ஆகிவிட்டது. கிழவர்களுக்குத் தூக்கம் அதிகம் வராதுதான். அதற்காக நடுக்கூற்றில் கூடத் தூங்காமல் இருக்க முடியுமா? ஏறுகால்மீது அமர்ந்தபடி, வழக்கமாக ஆடும் தலையாட்டத்தோடு கூட, தூக்கத்தால் ஆடும் ஆட்டத்தையும் சேர்த்து ஆடிக்கொண்டு வந்தான் நல்லான். அவன் வண்டியிலிருந்து கீழே விழாமல் வந்ததே மிகுந்தபாடு, பெருமுயற்சி. உள்ளே நன்றாகக் காலை நீட்டிக்கொண்டு அவன் படுத்துக்கூட இருக்கலாம். அதை விரும்பவில்லை.

அந்த மாடுதான் மிகவும் விழிப்புடையதாயிற்றே! நடுப்பாட்டையிலா அது போயிருக்கும்? போக வேண்டிய பக்கமாக நன்றாக ஒதுங்கிப், பாட்டையில் செல்லும் வேறு வாகனங்களுக்கு இடையூறு இல்லாமல்தான் அது போய்க்கொண்டிருந்தது. அப்படி
அது ஒதுங்கிப் போனது கூட
அதற்கு இடையூறாக முடியும்
என்று அது எதிர்பார்த்ததா,
என்ன?

பின்னால் மிக விரைந்து லாரி
ஒன்று வந்தது. அந்த லாரி
ஓட்டி நல்லானைப்போல் கிழவனா
இருந்திருக்க முடியாது. ஆனால்,
தூங்கி வழிந்துகொண்டு வந்திருக்
கிறான். ஒதுங்கிச் செல்லவேண்
டிய பக்கமும், விலகிக் கடந்து
தாண்டிப் போகவேண்டிய பக்க
மும் இருவேறு பக்கங்கள் அல்ல;
ஒரே பக்கந்தான் என்று அந்தத்
தூக்கக் கலக்கத்தில் அவன் முடிவு
பண்ணிக்கொண்டுவிட்டான்
போலும்!

ஆள் அண்டாத அந்தப் பகுதி
யில், அந்த நடுக்கூற்று வேளையில்
லாரியைத் தடுத்து நிறுத்த யார்
இருக்கப்போகிறார்கள்? தடுத்து
நிறுத்தித்தான் என்ன காணப்
போகிறார்கள்—நன்மையை? யாரும்
எதிர்பாராததை அங்கே நிகழ்த்தி
விட்டு லாரி தன் போக்கில் போய்
போய்விட்டது.

அந்த வண்டியும், அந்த மாடும்
அவற்றால் வாழ்ந்து வந்த நல்லா
னும் ஒரே சமயத்தில் தங்கள் கதை
களை முடித்துக்கொண்டுவிட்டார்
கள்.

★

கடந்த 22–11–60ல் சென்னை
பல்கலைக் கழகத்தின் சார்பில்
தலைசிறந்த பேச்சாளியினை
தேர்ந்தெடுக்கும் பேச்சு
போட்டியொன்று நடைபெ
றது.

அதில், தி. மா. மு. க. உறு
பினரும், கே. ஏ. மதியழகன்
பி. ஏ. அவர்களின் இ
வலும், சட்டக்கல்லூரி மாண
வருமான தோழர் கே.
கிருட்டினசாமி, பி. ஏ. (ஆன
தலைசிறந்த பேச்சாளராக
தேர்ந்தெடுக்கப்பட்டு
ளார்.

கருப்புக் கண்ணாடி

[கருணை]

வானம் அழுது ஓய்ந்ததோ, அன்றி மகிழ்ச்சிப் பெருக்கால் கண்ணீர் உகுத்ததோ தெரியாது. ஆனால் இப்போது ஓய்ந்திருந்தது. வான வீதியிலே சற்று முன் போர்த்தப்பட்டிருந்த கருப்புச் சால்வைகளை, யாரோ வேண்டாதவன் பிரித்தெடுத்துத் தூர எறிந்ததுபோல எங்கோ மறைந்துகொண்டிருந்தன, வானம் வெறிச்சோடிக் கிடந்தது. மழைத் தொந்தரவால் அவதிப்பட்டு அடைந்துகிடந்த மக்கள், ஒவ்வொருவராக வெளிக் கிளம்பிக்கொண்டிருந்தனர். அவர்களையொட்டி இதுதான் சமயம் என்று தெருவில் நிற்கும் தண்ணீரில், தங்கள் பிஞ்சுக் கால்களை நனைத்து விளையாடி மகிழ எண்ணிய சிறுகுழந்தைகள், தங்கள் தங்கள் வீடுகளிலிருந்து சிட்டுப்போலத் துள்ளிக் குதித்து வெளிவந்துகொண்டிருந்தனர். அவர்களைக் கண்ட பெற்றோர், தமது அன்புச் செல்வங்கள் மழைத் தண்ணீரில் நனைந்தால் எங்கே நோய் வாய்ப்பட்டு விடுவரோ என்ற அச்சத்தில், அவர்களை விரட்டிக்கொண்டிருந்தனர். இவ்வித சூழ்நிலையில் எதையுமே பொருட்படுத்தாத-அதோ, அந்த மாடி வீட்டில், "அவர் எங்கே? அந்த அத்தை எங்கே...? சித்தி எங்கே...?" என்ற குரல்கள் ஒலித்துக்கொண்டிருந்தன. எங்கும் ஒரே சத்தம். ஒரே பரபரப்பு.

"மணி எட்டாகப் போகிறது; இந்த 'மைக்'காரனைக் காணோமே" என்று அங்கலாய்த்துக் கொண்டிருந்தான் மணி. பந்தலில் கட்டியிருந்த 'மாத்து' நனைந்து போனதே!" என்று வருந்திக்கொண்டிருந்தான் மணியின் நண்பன் மாணிக்கம். மாப்பிள்ளை வீட்டாரின் தேவையைக் கவனித்துச் செய்யும்படி பணித்துக்கொண்டிருந்தார் மணியின் தந்தை மலையப்பர். திருமண வேளை நெருங்க நெருங்க அந்த வீட்டைச் சுற்றிலும் கூட்டம் அதிகமாகியது. மணி எதையோ நினைத்துக்கொண்டவனை வீட்டினுள் ஓடினான். மணப்பெண்ணான தன தங்கையிடம் தனக்கு அப்பா வாங்கிய 'M' எழுத்துள்ள மோதிரம் எங்கே என்று கேட்டான். அதை அவள் எடுத்து நீட்டியதும் தன் விரலில் அணிந்துகொண்டே, "உன் மாப்பிள்ளைக்கு நான் மோதிரம் அணியும்போது அவர் விரலை எங்கே ஒடித்துவிடுவேனோ என்று பயந்துவிடாதே!" என்று குறும்பாகக் கூறியபடி வெளியே ஓடினான்.

நேரம் காலை 9 மணி, கார் காலமானதால் மெதுவாகக் காய்ந்துகொண்டிருந்த பகலவன், சிறிது சிறிதாகச் சூடேற்றிக் கொண்டிருந்தான். இப்போது அந்த வீடு முழுதும் தங்க வளையல்களின் தக தகப்பும், கண்ணாடி வளையல்களின் கலகலப்பும், பெண்களின் கூந்தலை அலங்கரித்த மலர்களின் நறுமணமும் எங்கும் கமழ, இருந்தோரை மகிழ்ச்சிப்படுத்திக்கொண்டிருந்தன. பந்தல் நுழை வாயிலில் பன்னீரும், சந்தனமும், ரோஜா மலரும் தாங்கியபடி இருவர் நின்றிருந்தனர். அவர்களின் நடுவே மலையப்பர் நின்று வருவோரை இருகரம் கூப்பி வரவேற்றுக்கொண்டிருந்தார்.

மணவேளை நெருங்கியது. மாப்பிள்ளை அழைப்பு முடிந்தது. பெண்ணை அழைத்துவந்து பெரியோர் வழிநடத்த, நாணம் தலை கவிழ்க்க, செங்கமலம் வந்தமர்ந்தாள். மூத்தோர், மூத்த தமிழ்ப்பா பாடினர். உறவினர் வாழ்த்தினர். உற்சாகம் கரைபுரள ஆனந்தன் மெதுவாக எழுந்து செங்கமலத்தின கழுத்தில் தாலியைக் கட்டினான். கெட்டிமேளம் முழக்கியது. குரவை ஒலி எழுப்பினர். செங்கமலத்தின் செந்தாள் விரல்கள் மெதுவாகத் தாலியைத் தடவிப் பார்த்துக்கொண்டன. அவள் தன் செய்கையை யாரும் கவனிக்கிறார்களா என்பதைக் கவனிக்க மறக்கவில்லை. அதைப்போலவே கூட்டத்தில் சிலர் அவள் கணவனைக் கவனிக்க மறக்கவில்லை.

"ஏண்டி ஏ மலதா, இதென்னடி, தாலிகட்டும்போதுகூட மாப்பிள்ளை 'கூலிங்கிளாஸ்' கழட்டாமல் இருக்கிறார்"—என்றாள் மாப்பிள்ளையைக் கூர்ந்து கவனித்த மாம்பலத்து மாமி!

"ஆமா அத்தை; நானும் இப்பதான் பார்த்தேன்; ஒருவேளை..." யாரும் தன பேச்சைக் கவனிக்கிறார்களா என்று சுற்றிலும் பார்த்தபடியே கூறினாள், வேடிக்கையே தன் இலட்சியமாகக் கொண்ட வேலம்மாள்.

"ஆமாம்வேலம்மா; தாலிகட்ட எழும்போதே குஷியா இல்லாமல் மெதுவாத்தான் எழுந்திருச்சார். அப்பவே நான் சந்தேகப்பட்டேன். கண்ணிலேஏதோகோளாறு இருக்குமோன்னு" இது பிறர் செய்கையையே பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்ட பாக்கியத்தின் குரல்.

'சீ, சீ! அப்படியெல்லாம் பேசாதீங்க, யார் காதிலாவது விழப்போகுது. அப்புறம் பெண் வாழாவெட்டியாகிடுவா......" இது பிறர் வாழ்க்கையில் சிறிது கவனம் செலுத்தும் கனகத்தின் குரல்.

"நீ சும்மா இரு கனகம். நாம் மூடி வைச்சா உண்மை வெளிப்படாமலா போகும்...?" பிறர் உள்ளத்தைக் குத்திக்கிளறி அவர்கள் படும் துன்பத்தைக்கண்டு வேடிக்கை பார்க்கும் வேலம்மாளின் குரல்தான் இது.

இத்தனைக்கும் காரணம் அந்த வாலிபன் அணிந்துள்ள குளிர்ச்சிக் கண்ணாடிதான். அந்தக் கண்ணாடியால் ஏற்பட்ட இந்த விநோதக் குரல்கள் சிறிது சிறிதாகக் கிளம்பி அலையோடு இணையும் நாதம்போன்று கலந்து ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுத்துவிட்டது. சற்று நேரத்தில் இந்தப் பேச்ச அந்த வீடு முழுதும் சுழல ஆரம்பித்து, எப்படியோ மணியின் தாயார் காதில்போய் விழுந்தது. இதைக் கேட்டதும் அந்த அம்மையார் அதிர்ச்சியடைந்தார்கள். மகன் மணியைத் தனியே அழைத்து விசாரித்தார்கள். அவன் கொஞ்சம் புத்தி கட்டையானவன். தங்கையின திருமணம் முடிந்துவிட்டது. ஆர அமர யோசித்துக்கொள்வோம் என்று சிந்தித்துப் பார்க்கும் தன்மையுடையவனாக அவன் இருந்திருந்தால், அங்கு நடந்த அமளி பெரிதாகிவிடாமல் தடுத்திருக்க முடியும். ஆனால் தாய் கூறியதும்

அவன் ஓடோடிச் சென்று தந்தையிடம் கூறினான். இதைக்கேட்ட மலையப்பரின் உள்ளம் அதிர்ச்சியால் சுழல ஆரம்பித்தது. "ஐயோ! என் அன்பு மகள் செங்கமலத்தின் கணவன் குருடனா......?" அவரை அறியாமலே இந்தவாக்கியம் வெளி வந்தது. தாய், மகன், தந்தை மூவரும் துக்கம் தோய்ந்த முகத்தோடு தனியே ஒதுங்கி நின்றனர். அனைவருக்கும் திருமணத் தாம்பூலம் அளிக்கப்பட்டது. வந்தவர்கள் கலைந்துகொண்டிருந்தார்கள்.

மலையப்பர் வேகமாக எழுந்தார். வாசலில் நின்றிருந்த ஆனந்தன் அண்ணனிடம் சென்று, சற்று நிதானமாகவே, "மாப்பிள்ளை எப்போதும் கூலிங்கிளாஸைக் கழட்டவே மாட்டாரா?" என்று கேட்டார். அவர் இதுபற்றிச் சிறிதும் கவலைப்படாமல் அமைதியாகவே மலையப்பரைப் பார்த்தார். மலையப்பர் மனம் சிறிது சிறிதாகக் காற்று ஏற்றப்படும் பலூன்போல் கோபத்தால் உயர்ந்தது. "மாப்பிள்ளை பார்வைக் குறைவானவரா......?" என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டார். மீண்டும் மீண்டும் அவர் வாய் அதையே கூறியது. யாரோ பற்றவைத்த தீ எங்கிருந்தோ புகைந்து வந்து அவருள்ளத்தில் கொளுந்துவிட்டு எரிய ஆரம்பித்துவிட்டது. வெந்து கொண்டிருக்கும் வீட்டிலிருந்து தேக்குக் கட்டைகள் 'படார் படார்' என்று வெடித்துச் சிதறுவது போல மலையப்பர் என்னும் உரம் பாய்ந்த மனம், ஊரார் வைத்த தீயால் வெடித்துச் சிதறியது. மாப்பிள்ளையின் தந்தை ஆளவந்தார் இருந்த இடத்தை நோக்கி மலையப்பர் விரைந்தார். அங்கு அவர் உறவினருடன் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டதும், அவர் மனம் வெடிக்க ஆரம்பித்தது.

"எத்தனை நாளாய்யா திட்டம் போட்டீர் இதைப்போலத் துரோகம் செய்வதற்கு......?" எரிமலை வெடித்துச் சிதறுவதுபோலக் கொதித்து நின்றார் மலையப்பர்.

ஆளவந்தார் ஒன்றும் புரியாமல் திகைத்தார். மலையப்பரின் தோற்றத்தையும் அவர் முகம் காட்டிய கோபக் கனலையும் பார்த்தார். அவரால் ஒன்றுமே பேசமுடியவில்லை. இந்த அமைதிநிலைக் கண்ட மலையப்பருக்கு மேலும் சினம் பொங்கியது.

"என்ன ஓய், பேசாமலிருக்கிறீர்! காரியம் முடிந்துவிட்டது. இனி என்ன பேசி என்ன செய்ய என்ற ஆணவமா...?"

ஆளவந்தாரின் கைகால்கள் வெடவெடத்தன. மனம் ஒருநிலை கொள்ளாமல் குழப்பியது. என்ன அவர் கேட்கிறார் என்று புரியாத நிலையில் "என்ன சொல்கிறீர்கள்?"! என்று பதட்டமில்லாமலே கேட்டார். இதைக் கேட்ட மலையப்பர் எரிமலையின் சிகரமானார்.

"ஓய்! இந்தப் பூனையும் பால் குடிக்குமான்னு கேட்கிறீர். இந்தப் பசப்பு வார்த்தைகள் இனிப் பலிக்காது. உம் மகன் குருடன், இல்லையா...?" அவர் கண்களில் தோன்றிய அனல் ஆளவந்தார் உள்ளத்தைச் சுட்டுக் கருக்கியது, அனலில் வெந்து சாம்பலாகும் பசுந்தளிர் போன்று அவர்உள்ளம் சாம்பிக் கருகியது. எண் சாண் உடலும் ஒரு சாணாக ஒடுங்கிப்போய் நின்றார்.

"சீ! நீயும் ஒரு மனிதனா? பல நாட்களாய்த் திட்டம் போட்டே என் குடும்பத்தை வஞ்சித்துவிட்டாயா கயவனே!" என்று கத்தினார். கூட்டம் கூடியது. ஆனந்தனும் வந்துகொண்டிருந்தான்.

தந்தை எவ்வளவு அமைதியானவர் என்று பெயர் பெற்றிருந்தாரோ, அதற்கு எதிரிடையானவன் ஆனந்தன். 'முன் கோபி' என்ற பட்டமும் பெற்றிருந்தான். அவன் காதுகளில் மலையப்பர் கூறிய வார்த்தைகள் விழுந்து, அவன் கன்னத்தில் சுரீர் என்று அறைந்தன. அதே வேளையில் மலையப்பர் மீண்டும், "உன் மகன் குருடன் என்றால், உமது மகுடம் கீழே சாய்ந்துவிடும் என்ற நினைப்பாயா?" என்று குத்திக்காட்டினார். இந்த வார்த்தையடி அவன் உள்ளத்தைத் தாக்கியது. சிறிது நேரம் அசைவற்று நின்றான்.

ஒரு மனிதன் தனது குறையைப் பலர் நடுவில் பிறர் சுட்டிக்காட்டும்போது எவ்வளவுதான் சாந்தமுள்ளவனாக இருந்தாலும், சினத்தின் உச்சகட்டத்திற்கே சென்றுவிடுவான் என்பது கண்கூடு. இந்த விதிக்கு ஆட்பட்ட ஆனந்தன் மனம் குமுறியது. கூட்டத்தை விலக்கிக்கொண்டு மலையப்பர் முன்பு சென்றான்.

"இந்தாய்யா பெரியவரே, நான் குருடனா இல்லையா என்பதை நன்றாகத் தெரிந்து பெண்கொடுக்க முன்வந்திருக்கவேண்டும். அவசியமில்லாத வார்த்தையைக் கொட்டினீர், நடப்பது வேறு. அப்பா, வாங்க போகலாம்" — தகப்பன் கைகளைப்பற்றி இழுத்தபடி வெளியேறினான். கூட்டத்திலிருந்த மாம்பலத்து மாமி, கமலதா, வேலம்மாள், பாக்கியம்மாள், மாலதி உட்பட அனைவரும் மூக்கின்மேல் விரல் வைத்தனர். யாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த செங்கமலம் உள்ளிருந்து ஓடோடி வந்தாள். அவளைத் தாண்டி ஆனந்தன் போய்க்கொண்டிருந்தான்.

"உம்... உன் தலையில் எழுதியது அவ்வளவுதான்..." யாரோ ஒரு தயாபரரின் இந்த வார்த்தை செங்கமலத்தின் தலையில் சம்மட்டி கொண்டு தாக்கியது. யார் யாரோ சென்று ஆனந்தனைச் சமாதானப்படுத்த முயன்றனர். முயற்சி எல்லாம் வீணாயின. அந்த அமளிக்கிடையில், அந்த வீட்டு முருங்கை மரத்தில் எங்கிருந்தோ வந்த இரு சிட்டுகளில் ஒன்று அமர முயன்றும் முடியவில்லை. கீழே விழுந்து, மீண்டும் எழுந்து எங்கோ ஒரு திக்கை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது.

*

ஐந்து ஆண்டுகளுக்குப்பின்...

அன்று இயற்கை எவ்வாறு அழுததோ, அதைப்போலவே இன்றும் வானம் பெய்து ஓய்ந்திருந்தது.

அப்போது மணி இரவு எட்டு. அதோ காணும் வீதியிலிருந்து ஒரு வாலிபன் வந்துகொண்டிருந்தான். அவன் அணிந்திருந்த உடை அந்த இருட்டிலும் பளிச்சிட்டுக் காட்டியது. பொதுவாக அந்தச் சந்தில் இரவு பத்து மணிக்கு மேல்தான் ஆள் நடமாட்டமே இருக்கும். அந்த இடம் 'ஒரு மாதிரி' என்று பெயர் பெற்றிருந்தது. ஆனால் அன்று வழக்கத்துக்கு மாறாக அந்த வாலிபன் வருவதைக் காணும் யாரும் சந்தேகிக்கவே செய்வர். காரணம், அவன் நடையில் வேகமோ அவசரக் கோலமோ தென்படவில்லை. அவன் எங்கும் பாராமல் தலை கவிழ்ந்தபடியே சென்றுகொண்டிருந்தான். அவன் பின்னால் ஒரு பெண் வேகமாக வந்து அவனைத் தொடர்ந்தாள். திரும்பிப்பார்த்த அவன் நின்றான். அவளும் நின்றாள். ஏதோ கூறினாள். அவன்

சட்டை பண்ணாமல் நடந்துகொண்டிருந்தான். அவள் அவனை விடுபவளாக இல்லை.

"அந்த இடத்திற்கு வருகிறீர்களா...?"

அவன் திகைத்துத் திணறி, அவளை ஏற இறங்கப் பார்த்தான். அவன் பார்வை, இவள் ஒருவேளை கீழ் மகளாக இருப்பாளோ...... என்று எண்ணியது. இருந்தும் மனதை அடக்கிக்கொண்டு, பதில் பேசாமல் தன் வழியே நடந்தான். ஆனால் அவள் ஓடிச்சென்று "சும்மா வாங்க; பயப்படாதிங்க!" என்று கூறிக் குழைந்து நின்றாள். இதைக் கேட்டதும் அவனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. "சீ! நீயும் ஒரு பெண்ணா...!" ஓங்கி அவள் கன்னத்தில் ஒரு அறை விட்டான். அவள் அதிர்ச்சியடைந்து கன்னத்தைத் தடவிக்கொண்டே நின்றாள். நின்று யோசித்தவள் மீண்டும் அவனிடம் ஓடி, "நீங்கள்... உங்கள் பெயர் ஆனந்தனா...?"—தடுமாறிக்கொண்டே கேட்டாள். இதைக் கேட்ட அவன் திகைப்பால் திணறினான்.

"என்ன பேசமாட்டீர்களா......? ஆனந்தன்தானே நீங்கள்..." என்றாள் மீண்டும். "நான் யாராயிருந்தால் உனக்கென்ன... போய்விடு! உன்னை அடித்ததற்காக வருந்துகிறேன்; போய்விடு!" என்றான். அவள் அவனிடம் நெருங்கி, "ஆமாம் என் அத்தான்தான். அன்று கோபத்தால் கத்திய அதே குரல்தான்... அத்தான்; நான்தான் செங்கமலம், என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்..." அவன் கால்களுக்கிடையில், சாய்க்கப்பட்ட வாழைமரம் போல விழுந்தாள். அவன் அசைவற்று நின்றான். "அத்தான் பேசமாட்டீர்களா...? அன்று நிகழ்ந்த சிறு விளைவு என் வாழ்வை அலைக்கழித்தது போதும். இனி நீங்களில்லையேல் நானில்லை. நானில்லையேல் நம் வாழ்வு இல்லை அத்தான். என்னை ஏற்று என் வாழ்வைக் கனிகுலுங்கும் மலர்ச்சோலையாக்குங்கள்" என்று கெஞ்சினாள்.

திகைப்பிலிருந்து விடுபட்ட ஆனந்தன் அவள் தோளைப்பற்றி "எழு செங்கமலம், சிறு தவறால் நமது ஐந்தாண்டு வாழ்வு சிதைந்து போயிற்று. அதுவும் நன்மைக்கே. ஒரு குற்றமும் செய்யாத உன்னைப் பழிவாங்கிவிட்டேன். என்னை மன்னித்து விடு! என்று கூறி அவள் கரம் பற்றினான். எனினும் அவள் எவ்வாறு இங்கு வந்தாள்; எப்படித் தன்னைத் தெரிந்தாள் என்ற வினா அவன் உள்ளத்தில் எழுந்தது. ஆனால், அவளே அதை உணர்ந்துகொண்டாள்.

"அன்று உங்களைத் திட்டி விரட்டியதிலிருந்து என் தாய் தந்தை என்னைக் கண்டபோதெல்லாம் பெருமூச்சுவிட ஆரம்பித்தனர். என் தந்தையைக்காணும்போதெல்லாம் என் வாழ்க்கைக் கெடுத்து என்னை வாழாவெட்டியாக்கிவிட்டாரே என்று என் மனம் வெதும்பியது. நம் திருமணம் முடிந்த நாலாம் ஆண்டு அதே கவலையால் என் தாய் இயற்கை எய்தினார்கள். தந்தை சிறிது நாளில் ஒன்றும் சொல்லிக்கொள்ளாமல் ஊரை விட்டே போய்விட்டார். நானும் என் அண்ணனும் இருந்தோம்.

அன்று உங்கள் கறுப்புக் கண்ணாடியைக் கண்டு இகழ்ந்தவர்கள், அதன் பின் என்னைக் காணும் போதெல்லாம் குத்தலாகப் பேச முனைந்தனர். எனக்கு அங்கு இருக்கவே மனம் வெறுத்தது. அந்தச் சமயத்தில் என் பள்ளித் தோழி ஒருத்தி இந்த ஊரிலிருந்து எங்களூர் வந்தாள். என்னைத் தன்னுடன் வரும்படி அழைத்தாள். 'ஊர் வலி' தாங்கமுடியாமல் தவித்துக்கொண்டிருந்த எனக்கு அவள் அழைப்பு ஆறுதலைக் கொடுத்தது. அவளுடன் புறப்பட்டேன்.

இங்கு வந்த ஒரு வாரத்தில் அவள் எப்படி வாழ்கிறாள்; எவ்விதம் பணம் சம்பாதிக்கிறாள் என்பதையுணர்ந்தேன். நான் தூங்கிய இரவுகளில் அவள் பலரின் வரவுக்காகக் காத்திருக்கிறாள் என்பதை நான் உணர்ந்தபோது, அந்த வீடே இடிந்து என் தலையில் விழுவதுபோன்ற உணர்ச்சி உண்டானது. இனி ஒரு கணமும் இங்கு இருக்கக்கூடாது என்று முடிவெடுத்து நான் தூங்கிய அன்று, "ஐயோ, அத்தான்! சொல்லவும் நா கூசுகிறது. எவனோ ஒரு முரடன் என் புருவ எழிலை அழிக்க வெறிநாய்போல நின்றிருந்தான். அப்போது உங்களை நினைத்துக்கொண்டேன். என் உடலில் ஒரு புதிய தெம்பு உண்டானது. சுற்றிலும் பார்த்தேன். ஏதோ ஒன்று தட்டியது. அதை எடுத்து அவன் நெஞ்சில் ஓங்கி எறிந்துவிட்டு வெளியேறினேன். ஓட்டமும் நடையுமாக புகைவண்டி நிலையம் வந்தபோது, நமது திருமணத்திற்கு வந்திருந்த வேலம்மாள் என்னைக் கண்டுவிட்டார்கள். அவள் சொந்த இடம் இது என்பது எனக்குத் தெரியாது. நடுவேளையில் போக வேண்டாம் என்று தடுத்தார்கள். நான் வந்த காரணம் கேட்டார்கள். நான் ஏதும் கூறமறுத்து, "அப்பா இரயிலடியில் வந்து காத்திருப்பார்" என்று கூறிப்பார்த்தேன். அவர்கள் நம்பமறுத்துப் பிடிவாதமாகத் தனதுவீட்டிற்கு அழைத்து வந்தார்கள். அடுத்தநாள் மாலையே நீங்கள் இந்த வழியாகப் போவதை அவர்கள் கண்டார்கள். உடனே என்னை அழைத்து "இவர்தானடி உன் கணவர்......" என்று காட்டினார்கள், என் கண்களையே என்னால் நம்பமுடியவில்லை. ஆனால்...நீங்கள் இந்தத் தெருப்பக்கம் போவது யாரோ ஒரு பெண்ணுடன் கூடா நட்புக் கொண்டிருக்கிறீர்கள் என்ற அதிர்ச்சிச் செய்தியையும் தூக்கிப் போட்டார்கள். அதைக்கேட்டு என் மனம் வெடித்துச் சிதறியது. அன்று இரவு முழுதும் கண்ணீர் விட்டுக் கதறினேன்.

"பாதகி! உன் கணவன் கூடா நட்புக்கு ஆளானான் என்றால், அதற்குக் காரணமே நீதான்" என்று இடித்துக் காட்டியது என் மனம்; என் தலையைக் கதவில் முட்டிக்கொண்டேன். எப்படியும் இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும்; இல்லையேல் அவர் வாழ்வு கெட்டுச் சீரழிந்துபோகும் என்று முடிவெடுத்தேன். அதன்பின் பல நாட்கள் காத்திருந்தேன். என் கண்கள் வலி எடுத்தன. என் மனம் துயர் தாங்காமல் துவண்டது, உங்களைக் காணாததால். எப்படியும் உங்களைக் காணலாம் என்ற நப்பாசையால் மேலும் காத்திருந்தேன். அது வீணாகவில்லை. இன்று உங்களைக் கண்டேன். மனம் ஒடிந்துதான் இது

"தனித்து வாழும் சிறிய நாடுகள்"

விலை ரூபா 1—00

கிடைக்குமிடம்:—

நால்வர் பதிப்பகம்

சென்னை—15.

போன்ற உறவுகொண்டுவிட்டீர்கள் என்று தவறாகப் புரிந்துகொண்டேன். அதே வழியையே நான் கடைப்பிடித்து உங்களைத் திருப்ப முனைந்தேன். அதன் பலன் நீங்கள் உத்தமர் என்பதை என் கன்னத்தில் அறைந்த அடியே சான்று பகர்கிறது என்று கூறி அவன் நெஞ்சில் முகம் புதைத்தாள்.

"செங்கமலம் என்னை மன்னித்துவிடு, நான் செய்த கொடுமைகளுக்கெல்லாம் இந்தத் தண்டனை போதாது. பெண்ணுலகிற்கு என்னைப்போல் தீங்கிழைத்தவன் யாருமில்லை" என்றான் ஆனந்தன். அவன் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது.

"அப்படிச் சொல்லாதீர்கள் அத்தான். என் வாழ்வே மடிந்து போனதோ என்று கதறித்திரிந்த எனக்கு, நீங்கள் கிடைத்துவிட்டீர்கள். இனி எங்கும் போகவேண்டாம். உங்கள் அருகிலேயே நான் இருப்பேன், என்றாள் அவள். அவள் கண்கள் குளமாயின. தலையை நிமிர்த்தி அவன் கண்களைப் பார்த்தாள். "எங்கே அத்தான் உங்கள் கண்ணாடி......?" என்றாள். அவன் சிரித்தபடி "நான் எப்போதுமே குருடனில்லை செங்கமலம். கண்களில் ஒருவித எரிப்பு இருந்ததால் டாக்டரின் ஆணைப்படி குளிர்ச்சிக் கண்ணாடி அணிந்து வந்தேன். அதனால் விளைந்த விளைவுக்குப் பிறகு நேரே சென்னை சென்று சிறு சிகிச்சை செய்துகொண்டேன். எனினும் என் கண்ணாடியால் வெளியுலகுக்குக் குருடனாக இருந்தேன். இன்றுதான் என் உண்மையான கண்கள் திறந்தன. அகக் கண்கள் ஒளிபெற்றுவிட்டன; நான் குருடன் இல்லை; வாழ்வு ஒளிபெற்றவன். எங்கே அருகில் வா" என்று இழுத்தான்.

"அப்படியா......எப்போது ஒளி பெற்றீர்கள்?" என்றாள் குறும்போடு.

"உன் கைகள் என் கன்னத்தில் பட்டபோது" என்று அவள் கரங்களை எடுத்துத் தன் கன்னத்தில் ஒற்றிக்கொண்டான்.

வானம் மறுபடியும் மின்னியது. பயத்தில் செங்கமலம் அவனுடன் இணைந்தாள். ஊர் வதந்தியின் கொடுமை அவர்களைப் பிரித்து வைத்தது போதும் என்று பறை சாற்றியதுபோல மழை அவர்களை வாழ்த்தியது. ✱

"விடுதலை முழக்கம்"

—(தி. வீ. பாலு)—

இறந்த காலத்தில் நன்றாக வாழ்ந்து, இடையிலே இருந்ததை இழந்து, நிகழ்காலத்தில் தாழ்ந்து, எதிர்காலத்தில் வாழத் துடித்துக்கொண்டிருக்கும், ஒரு மாபெரும் இனத்தின் இலட்சியச் சொல் வரிசையாகும், "திராவிட நாடு திராவிடருக்கே" என்பது! இழந்ததைத் திருப்பப் பெற, ஒலி எழுப்பும் விடுதலைக் கீதமாகும்! சோர்வுற்றுக் கிடக்கும் எவரையும், சிறிது நேரம் சிந்திக்கத் தூண்டும் உரிமை முழக்கமாகும்! வரலாற்று உண்மையும், வருங்கால உரிமையும் பெற்று விளங்கும், ஒரு தேசிய இன விடுதலைக் கிளர்ச்சி இயக்கத்தின் இலட்சியக் குரலாகும்! "திராவிட நாடு திராவிடருக்கே" — இந்தச் சொற்றொடரிலே பூட்டிய விலங்கினை உடைத்தெறிந்து, விடுதலைப் போராட்டத்திற்குத் தம் உயிரினையே பணயமாக வைத்துவிட்டு, ஈடுபட்டிருக்கும், மாபெரும் இயக்கமான தி.மு.க.வின் கொள்கைவிளக்கமும், "நாம் யார்? நம் நாடு எது?" என்று, இடையிலே மறந்தவற்றை நினைவூட்டி உணர்ச்சியூட்டும் உரிமைக் குரலும், திராவிட நாடு ஏன் வேண்டும், நாடு திராவிடர்க்கானால் என்ன நன்மை' என்ற முழு விளக்க உரையினையும், இன்னும் பற்பல கருத்துக் கருவூலங்களையும், தன்னகத்தே அடக்கி வைத்துக்கொண்டுள்ள ஒரு அற்புதச் சொற்றொடராகும் "திராவிட நாடு திராவிடருக்கே"!

இரண்டு வரிகளிலே மாபெரும் தத்துவங்களை உள்ளடக்கிக் கொண்டிருக்கும், நமது தமிழ் மறையாம திருக்குறளைப்போல, இரண்டே சொற்களில், மாபெரும் கொள்கைகளையும், இலட்சியவிளக்கங்களையும், கருப்பொருள்களாக இதனோடு இணைந்து நின்று ஒளி பெறச் செய்யும் பெருமையும், ஆற்றலும், 'திராவிட நாடு திராவிடருக்கே" என்னும் சொற்றொடருக்கு எப்படிக் கிடைத்தது என்று சற்றுச் சிந்தித்தோமானால், நாம் நமது கழக வரலாற்றிலே பின்னோக்கிச் சென்று, 1944-ம் ஆண்டு, சேலத்திலே, மாளிகையிலேயிருந்த கட்சியை மரத்தடியிலே உள்ள கழகமாக மாற்றியதால் "திராவிட நாடு திராவிடருக்கே" என்னும் இவ்விரு சொல் வாக்கியத்திற்கு இத்துணை வலிவும் பொலிவும் கிடைத்துள்ளது என்பதை எளிதில் உணரலாம்! அதனாலேயேதான இலட்சக்கணக்கான இளைஞர்கள் இதனையே தங்கள் மூச்சாகக் கொண்டுள்ளனர்!

இவ்வளவு சிறப்புக்குரிய மூல முழக்கத்தைக் கேட்டுத்தான மாற்றார்கள் கேலி பேசுகிறார்கள்! "திராவிட நாடு, திராவிட நாடு எனக் கதறுகிறீர்களே, உங்கள் திராவிட நாட்டிற்கு எல்லைகளை வகுத்துக்கொண்டீர்களா? இன்ன இடத்திலிருந்து, இன்ன இடம் வரை, என்று உங்கள் திராவிட நாட்டிற்குக் கோடிட்டுக் காட்ட முடியுமா?" என்று நம்மைப் பார்த்துக் கேட்டுவிட்டு, நம்மை ஏதோ இதனாலேயே மடக்கித் திணறடித்துவிட்டதுபோலத், தாங்களே திருப்திப்பட்டுக்கொண்டு, எக்காளம் கொட்டும் ஏமாளிகள், சிலபேர் நாட்டில் நடமாடிக்கொண்டிருப்பதைக் கண்கூடாகக் காணலாம்!

எந்த நாட்டு விடுதலைக் கிளர்ச்சியும், நாட்டின் எல்லைக்கோட்டைக் கிழித்துக்கொண்ட பிறகு, எழுப்பப்பட்ட பிரச்சினையாக இதுவரை இருந்ததே கிடையாது! காங்கிரசுக்காரர்கள் இந்திய சுதந்திரத்திற்காக, இரவு பகல் கண் துஞ்சாது தண்டவாளம், தந்திக் கம்பங்களையும் விடாது, மாபெரும் "ஆகஸ்ட் போராட்டம்" நடத்தினார்களே அது போது, எந்த எல்லைகளை வரையறுத்துக்கொண்டு 'இதுதான் இந்தியா, இதற்குத்தான் சுதந்திரம்' என்று கேட்டார்கள்! அப்போது

இந்தியா பிரிட்டிஷாரால் ஆளப்பட்டு வந்ததால், பர்மாவும் உள்ளடக்கித்தான் இந்திய தேசப்படங்கள் போடப்பட்டிருந்தன! இதே தேசியத் திருவாளர்களால், "இந்தியா" என்று போடப்பட்டிருந்த படத்தில், பாரதமாதாவின் முந்தானை, தற்போதைய கிழக்குப் பாகிஸ்தானை மூடிமறைத்துக் கொண்டு, பர்மாவில்போய் காற்றடித்துப் பறந்துகொண்டிருந்ததே, இப்போதைய பாரதமாதா, முந்தானையைப்பாகிஸ்தானிலும், பர்மாவிலும் பறிகொடுத்த நிலையில் தானே காட்சியளிக்கிறாள்!

"இந்தி — சீனி பாயி பாயி" என்ற கீதம், இன்று "இந்தி, சீனி சோரி, சோரி" என்ற அவலக் குரலாகத் தோன்றிவிட்டது! கோவாக்கார டச்சு மாமா வேறு, பாரதமாதாவின் இடுப்பிலே "இச்சு இச்சு" மூட்டி வாய்பொத்திச் சிரிக்கிறான்! நாகா மலைக் குன்றுகளெல்லாம் இடியென எதிரொலித்துக்கொண்டிருக்கும் நாகர் நாட்டு மச்சான் பிசோ, பாரதமாதாவின் தோள்மீது கைபோட்டுக் கொண்டு, இது எனக்குச் சொந்தமென்று உரிமை முழக்கம் கிளப்புகிறான்! இந்த நிலையிலே பரிதவித்துக்கொண்டிருக்கிறாள், பரிதாபத்திற்குரிய பாரதமாதா! இவர்கள்தான் நம்மைப் பார்த்துப் பரிகசிக்கிறார்கள் "திராவிட நாட்டிற்கு, இவர்களுக்கு எல்லையே தெரியவில்லை! எல்லையில்லாத நாடு ஒரு நாடா?" என்று! நமக்குத் தெரியாதா இந்த எல்லையப்பர்களின் வீராதி வீரமும், சூராதி சூரத்தனமும்! வரிந்து கட்டிக்கொண்டு, இங்கேயிருந்து டில்லிக்குக் கிளம்பினார்களே, நமது அமைச்சர் பெருமக்கள். அந்தத் திருக்காட்சியைப் பார்த்திருக்கவேண்டுமே! தமிழ்நாட்டின் எல்லைக்குரிய "தேவிகுளம், பீர்மேடு ஆகிய பகுதிகளை மீட்காமல் திரும்போம்" என வீர முழக்கமிட்டபடி புறப்பட்டுச் சென்றார்களே, அடாடா, அந்தப் பாங்கினைப் பார்த்திருக்கவேண்டுமே! இவர்கள் போன வேகமென்ன, திரும்பி வந்த வேதனையென்ன? காணக் கண்ணிரண்டு காணாதே, கேட்கச் செவியிரண்டு போதாதே! "எல்லையாவது கொல்லையாவது— இனி எல்லையென்று வந்தால், உங்கள் பல்லைப் பிடுங்குவேன்" என்ற சொல்லை, வடக்கத்திநாதர்வீச, "நமக்கேன் இத்தொல்லை" என, இருந்த செங்கோட்டையிலும், பாதியைக் கோட்டைவிட்டு வந்த கோமான்களல்லவா இவர்கள்?

இந்த எல்லைச் சூரர்கள்தான் நம்மைப்பார்த்து, "நாட்டிற்கு எல்லை நிர்ணயிக்காத விசித்திரப் பிறவிகள்" என்று விமர்சித்து, எல்லையில்லாத் திருப்திப்பட்டுக் கொள்கிறார்கள்! ஒரு நாட்டின் எல்லை, அவ்வப்போது நிகழும் அரசியல் பூகம்பங்களினால், சுருங்குவதும், விரிவதும் எல்லோரும் அறிந்த உண்மையாகும். இதற்காக, விவரமறியாமல், எக்காளம் போடுவானேன், கெக்கலி கொட்டிச் சிரிப்பானேன்?

சமதர்மக் கூட்டாட்சி என்பதன் பொருளே, யாராவது ஒருவர் மற்றவரை அடக்கியாள்வது என்பதல்ல. ஆந்திரர் தனியாகத் தமக்கெனத் தனிச் சுயாட்சி உரிமை பெற்றுச், சகல அதிகாரங்களையும் தாங்களே பெற்று, முழுச் சுதந்திர நாட்டினராகத்தான் வாழுவர். அதுபோலவே; கர்நாடகம், கேரளம், தமிழகம் ஆகிய பகுதிகளும் தனித்தனியே பூரண சுதந்திரத்துடன், சகல அதிகாரங்களுடன் தனித்தனியே ஆட்சி புரிந்துவரும்! நான்கு நாடுகளும், தங்கள் தங்கள் நாட்டுக்குள்ளே, தாங்களே வரி வசூலித்துக்கொள்ளவும், வசூலிக்கப்பட்ட வரிகளை தங்கள் நாட்டுக்குள்ளேயே பயன்படுத்திக் கொள்ளவுமான பரிபூர்ண அதிகாரம் பெற்ற நாடுகளாகத்தான் இயங்கிவரும்! இது தவிர, வெளிநாட்டு விவகாரங்கள், இராணுவம், வியாபார அபிவிருத்திகள்; கால்வாய் நீர்ப் பிரச்சினைகள் போன்ற பொது பிரச்சினைகளில் செயல்பட மட்டுமே, நான்கு நாடுகளும் ஒன்றுபட்டு, ஒரே நிர்வாக முறையில் இயங்கிவரும்! மற்றப்படி தங்கள் உள்நாட்டு விவகாரங்களில், முழு உரிமை பெற்ற தனி நாடாகவே, ஒவ்வொன்றும் (தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம்) அரசு புரிந்துவரும், நான்கு நாடுகளும், ஒன்றுபட்டு, ஒன்றாகக்கூடி, விவாதித்து, ஒவ்வொன்றிலிருந்தும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பிரதிநிதிகள் ஒன்றாக, நான்கு நாடுகளையும் இணைந்த கூட்டாட்சி நடத்தலாம்! இவை நான்கும் ஒன்றாகக்கூடி வாழ விரும்பும்போது, அடிமை என்ற சொல்லுக்கே இடமில்லை!

நகரங்களில் வாழ்பவர்களுக்கு நன்றாகத் தெரியும். "ஸ்டோர்" என்று வழங்கும், கட்டடத்தில் பல வீடுகள் இணைக்கப்பட்டு, ஒரே வாசல் வழியாக போக்குவரத்துகள் வைத்துக்கொள்ளும் குடியிருப்புப் பகுதியை எடுத்துக் கொள்வோம்! அந்நான்கு வீடுகளிலும், ஆந்திரர் மலையாளி, கன்னடத்தார், தமிழர் ஆகியோர் தனித்தனி வீடுகளில் வசிக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டுக்கும் தனிக் கதவு உண்டு பாதுகாப்பிற்கு! ஒவ்வொரு வீட்டிற்கும் தனிச் சமையலறையுண்டு உணவு சமைக்க! ஒவ்வொரு வீட்டில் வசிப்பவரும், அவரவர் பெறும் ஊதியத்தைத் தங்கள் மனைவி மக்கள், மற்றத் தேவைகளுக்காக மட்டுமே செலவிடுவர்! அப்படியின்றித் தங்கள் ஊதியத்தை எவராவது மூன்று வீட்டுக்காரர்களும் ஆந்திரத்தாரிடம் மட்டுமோ அல்லது எவராவது ஒருவரிடம் மட்டுமோ கொடுத்துவிட்டுத், தங்கள் வீட்டுச் செலவிற்கு, அவர் கையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கமாட்டார்

காரணம் தெரியுமா?

"தங்களுடைய பெயர்கள் அடங்கிய கடிதத்தாள்களின் தலைப்பில், பெயருடன் மற்றொரு அந்தஸ்தின் பெயரையும் சேர்த்துக் கொள்வதற்காகவே சிலர் தர்மகர்த்தர்களாக இருக்கிறார்கள்"

என்று 4—12—60-ல் மதுரையில், அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் பேசியுள்ளார்.

கள்! அவரவர் ஊதியத்தை, அவரவர் இல்லங்களுக்காக மட்டுமே பயன்படுத்துவர். அதுதான் நடைமுறை வாழ்க்கை முறையுங்கூட! இதன்றி, ஸ்டோரிலுள்ள குழாய்த் தண்ணீரை நால்வருமே பயன்படுத்திக்கொள்வர். வீடுகளைப் பழுதுபார்த்து, வெள்ளையடித்தல் போன்ற காரியங்களில் செலவை நால்வருமே பங்கிட்டுக் கொள்வர். இன்னும் ஒரு வண்டி விறகோ, முழு அரிசி மூட்டையோ, வாங்கி நால்வரும், தேவைக்கேற்றபடி பகிர்ந்தெடுத்துக்கொள்வதும் சர்வ சாதாரணமாக நிலவிவரும் பழக்கங்களாகும். இவ்வாறு நான்கு குடும்பத்தாரும், தனித்தனி இல்லத்தில் வசித்துக்கொண்டு, ஒருவருக்கொருவர் கொடுக்கல் வாங்கல் முதலியன ஏற்படுத்திக்கொண்டு. பொது விவகாரங்களில் ஒன்றுபட்டு வாழ்வதை நகரங்களிலுள்ள பல "ஸ்டோர்" குடியிருப்புப பகுதிகளில் காணலாம்! பல குடும்பங்கள் சேர்ந்ததுதான் ஊர். பல ஊர்கள் சேர்ந்ததுதான் நாடு! எனவே, குடும்பத்திற்குப் பொருந்தும் நீதி நாட்டிற்கும் பொருந்தும். இந்த முறையைத்தான், "தமிழகம், கர்நாடகம், ஆந்திரம், கேரளம் நான்கும் மொழிவழி பிரிந்து, இனவழி ஒன்றுபட்டு, நடத்தும் திராவிட சோஷலிஸ சமதர்மக் கூட்டாட்சி!! என்று கூறி வருகிறோம்!

இதுதான் நம்முடைய இலட்சியத்தின் அடிப்படை உண்மையே தவிர, மாற்றார், மக்களிடம்சென்று, நம் திட்டத்தை பலவாறாகத் திரித்துத், திராவிடம் வந்தால், ஆந்திரர் அடிமைகொள்வர், கேரளத்தார் குரல்வளையை நெறிப்பர், என்ற செப்படிவித்தைப் பேச்சுக்களால் "புலி வருகிறது, புலி வருகிறது" என்று மக்களை பயமுறுத்த எண்ணினால், ஆரம்பத்தில் புலிதான் வருகிறதோ என்று எண்ணிக் கூட்டமாக ஓடிவந்து, இக்குறும்புக்காரர்களைப் பார்க்க வரலாமேயொழிய, என்றேனும் ஒருநாள் உண்மையை அறிந்து, 'புலி' வரவில்லை, இலியால் இவர்கள்தான் ஏதோ உளறுகிறார்கள்" என்று போகப்போகிறார்கள். போகும்போது சும்மா போகமாட்டார்கள், கொஞ்சம் இவர்களையும் பதம்பார்த்துவிட்டுத்தான் போவார்கள் என்பது வரலாறு காட்டப்போகும் பாடமாகும்! எனவே, நம் இலட்சியத்தில் இம்மியளவுகூட ஓட்டை, உடைசல் இடையாது! புடம்போட்டு எடுக்கப்பட்ட தங்கம் நம் விடுதலை முழக்கம்! இதைக் கேலிபேசியோ, இண்டல் செய்தோ, அழித்துவிடலாம் என்று எவரேனும் எண்ணினால், அவர்கள் நம் அனுதாபத்திற்குரியவர்களாவார்கள்! எனவேதான், நாம், வரலாறு நமக்களிக்கப் போகும் பாடத்தை மறவாது இதய சுத்தியோடும், முழு உரிமையோடும், "திராவிடநாடு, திராவிடருக்கே" என்னும் விடுதலை முழக்கத்தை எழுப்புவோம்! வெல்க திராவிடம்! வாழ்க திராவிடர்!

★

"திராவிட நாடு"

பொங்கல் மலர்

விலை ரூபா 1-50

இவ்வாண்டுப் பொங்கல் மலர் மிகச் சிறந்த முறையில் வெளியிட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

விற்பனையாளர்கள், தங்களுக்குத் தேவைப்படும் மலரின் எண்ணிக்கை விபரத்தை முன்னதாகவே (25-12-60-க்குள்) தெரிவிப்பதுடன், மலர் ஒன்றுக்குக், கழிவு நீக்கி ரூபா 1-15 வீதம், 28-12-60-க்குள் அனுப்பிவைக்கவும்.

—பொறுப்பாளர்.

குறிப்பு:—பழைய பாக்கி முழுவதும் அனுப்பாதவர்களுக்கு மலர் கண்டிப்பாக அனுப்பப்படமாட்டாது.

அந்த இரண்டு ஓட்டுகள்!!

மார்ச் மாதம் பத்தாம் தேதி!

மாலை ஐந்து மணி!

மறுநாள் பதினொன்றாம் தேதி நடக்கப்போகும் நகரசபைத் தேர்தலை முன்னிட்டு ஊரின் மூலைமுடுக்கிலெல்லாம் பொதுக் கூட்டங்கள் நடந்தபடி இருந்தன.

தேர்தலில் எத்தனையோ கட்சிகள் போட்டியிட்டன. எல்லாக் கட்சிகளுமே கூட்டம் போட்டுக்'கொள்கை விளக்கம்' செய்யத் தவறவில்லை.

அதோ!

அந்த ஆற்றங்கரை மணற்பரப்பில் ஒரு பொதுக்கூட்டம் நடந்துகொண்டிருந்ததே! அடேயப்பா எவ்வளவு கூட்டம்! எள் போட்டால் கீழே விழாதுபோல் இருந்ததே! காரணம்.

புரட்சிப் பேச்சாளன் புதுமைப் பித்தன் பேசிக்கொண்டிருந்தான். அவன் பேச்சில் புயல் வீசியது!

"முடிவாகச் சொல்கிறேன். ஆறறிவு படைத்த மக்களே! உங்கள் வாக்குரிமையை விலைக்கு விற்காதீர்கள்! உரிமையை விற்றவன் உயிரற்ற சடலத்திற்குச் சமமாவான். நாணயமுள்ளவருக்கு — நேர்மை உள்ளவருக்கு — தொண்டுள்ளம் படைத்தவருக்கு—சிந்தித்து வாக்களியுங்கள்"

மக்களின் கையொலி வானைப் பிளந்தது! ஆரவாரம்! அது அடங்க வெகு நேரமாகியது! கூட்டம் முடிந்தது. அவரவர் வீடு நோக்கிப் போனார்கள்!

அதோ!

கடைசியாக ஒருவன், 'ஒட்டி உலர்ந்த உடல், பஞ்சடைந்த கண்கள் பரட்டைத் தலை' என வர்ணிப்பார்களே எழுத்தாளர்கள்! அத்தனை 'சர்வ லட்சணங்களும்' பொருந்திய ஒரு உயிர், யார் தெரிகிறதா! அவன்தான் ரிக்ஷாக்கார மணி. கூலிக்கு வண்டியிழுப்பதை விட்டுக், கூட்டத்தில் அவனுக்கு என்ன வேலை? காரணம்:

அவனுக்கும் வாக்குரிமை இருந்தது. அதுமட்டுமா? அவனுடைய மனைவிக்கும் வாக்குரிமை இருந்தது. என்ன? மனைவியா? அவனுக்கா! என்று ஆச்சரியப்படுகிறீர்களா? அதோ பாருங்கள்!

தெரிகிறதா, ஊருக்குக் கடைசியில் அந்த வாய்க்கால் ஓரத்தில், ஒரு ஓலைக் குடிசை! அதுதான் அவன் 'சுகவாசஸ்தலம்'! அந்தப் பொத்தல் குடிசைக்குப் பக்கத்தில் கிடக்கிறதே ஒரு ரிக்ஷா, சக்கரமில்லாமல், 'அனாதையாக'! அதுதான் மணியினுடையது! நான்கு நாட்களுக்கு முன் விபத்து ஒன்றில் சக்கரங்களை இழந்துவிட்டது! ரிக்ஷா!

குடிசைக்குள், ஒரு ஒடிந்த கட்டிலில் ஒரு உயிர் படுத்திருக்கிறதே, அது தான் மணி மனைவி, மருதாயி, கடுமையான இருமல், காய்ச்சல்! ரிக்ஷா விபத்தன்று படுத்தவள். எழுந்திருக்கவில்லை.

மணி குடிசைக்குள் நுழைந்தான். மருதாயியின் முனகல் ஒலி அவனை வரவேற்றது! கட்டிலுக்குப் பக்கத்தில் சென்றான். கட்டில் சட்டமும்,

சித்தன்

அவளும் ஒன்றாகத்தான் அவனுக்குத் தெரிந்தது. ஆமாம் அப்படி அவள் துரும்பாகி இருந்தாள்.

"மருதாயி, மருதாயி"-மெதுவாகத் தட்டி எழுப்பினான் மணி. அவள் பலமாக மூச்சு விட்டுக்கொண்டிருந்தாள். மறுபடியும் எழுப்பினான். மெதுவாகக் கண் விழித்தாள்!

"என்ன அத்தான்.........இம்புட்டு நேரம் எங்கே போனிங்க"—பேச்சுத் தடுமாறி வெளிவந்தது.

"கூட்டத்துக்குப் போனேன் மருதாயி".

"கூட்டத்துக்கா? அத்தான் கூட்டமும் கொம்மாளமும் நமக்கெதுக்கு... 'கும்பி' காயும்போது கூட்டம் வேறயா?"

மருதாயி பேசியது மணிக்கு வியப்பாக இருந்தது. அந்த மாதிரி அவள் பேசியதே இல்லை. அவன் ஒன்றும் பதில் சொல்லவில்லை. மணிக்கு வேறு ஒட்டுமில்லை, உறவுமில்லை. தாய் தகப்பன், அண்ணன், தங்கை எல்லாம் 'சகல'மும் அவள்தான்.

அவளுடைய உடல் நிலையை நினைக்கும்போது துக்கமாக இருந்தது, மணிக்கு! மருந்து வாங்க வழியில்லை! என்ன செய்வது? யாரிடம் போய்க் 'கடன்' கேட்பது! கடன் கொடுக்க யாருமில்லை. ஆனால், மருதாயி செத்தால், நோயால், ஐயோ! அதை எண்ணும்போதே மணிக்கு உடலெல்லாம் சிலிர்த்தது.

பலமாகச் சிந்தனை செய்தான். கண்டிப்பாக யாரிடமாவது பணம் கேட்கத்தான் வேண்டும். மருதாய்க்கு மருந்து வாங்கிக் கொடுத்தாக வேண்டும்... இல்லை என்றால்! மருதாயியின் கதி? அவன் கதி?

*

இரவு எட்டு மணி!

அந்த நீண்ட பாதையில் மணி வேகமாகப் போய்க்கொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் மருதாயியைக் காப்பாற்றவேண்டுமென்ற எண்ணத்தைத் தவிர, வேறு எதுவுமே இல்லை.

வேகமாகப் போய்க்கொண்டிருந்த மணியின் கால்கள்; மச்சு வீட்டு மாணிக்கனார் மாளிகை வாசற்படியில் போய் நின்றன!

மச்சுவீட்டு மாணிக்கனார் தேர்தலில் போட்டியிடுகிறார். பலமான எதிர்ப்பு அவருக்கு? காரணம், அவ்வளவு... 'நல்லவர்!'

தேர்தல் வேலைகள் வெகு மும்முரமாக நடந்துகொண்டிருந்தன! ஏகக் கூட்டம் வீட்டில்! பெரிய பணக்காரர் வீடல்லவா. கூட்டத்திற்குக் கேட்கவா வேண்டும்! அந்த அமளியில் மணி நிற்பதை யாரும் கவனிக்கவில்லை!

"எசமான்......"

யாரும் அவனைக் கவனிக்கவில்லை!

"எசமான்"......!

கேட்பதற்கு ஆளில்லை!

"எசமான்... உங்களைத்தானுங்க"-!

திரும்பிப் பார்த்தார் மாணிக்கனார்!

"என்னடா......ஏன் கூப்பிட்டே". அதட்டல்!

"ஏசமான்......என் மனைவிக்கு காயலாவாக இருக்கு, நான் ஏழை. மருந்து வாங்கப் பணமில்லை...... கொஞ்சம் உதவி செய்யுங்க எசமான்" — துக்கம் தொண்டை அடைக்கச் சொன்னான் மணி! கண்ணீர் விட்டான்.

மாணிக்கனார் முகத்தில் அனல் வீசியது. கோபம் தாங்கமுடியவில்லை. சீறினார்!

"ஏண்டா பயலே! பணம் கேட்கிற நேரமாடா இது......உனக்கு அறிவில்லே? விடிஞ்சா தேர்தல்...போடா! என் முன்னால் நிக்காதே......"

சீறினார் மாணிக்கனார். மறுபடியும் அவரிடம் பணம் கேட்க மணிக்குத் தைரியமில்லை! வேதனைப் பட்ட உள்ளத்தோடு வீடு திரும்பினான்! வேறு என்ன செய்யமுடியும்? அவன் ஏழை!

*

இரவு பன்னிரண்டு மணி!

மணி தூங்கவில்லை! மருதம்மாளின் தலைமாட்டில் சாய்ந்திருந்தான்! மருதாயி தூங்கினாள்; களைப்புத்தான்!

"மணி, மணி..." என்ற மெதுவான குரல் கேட்டது.

"யாரது" என்று கேட்டுக் கொண்டே வெளியேவந்தான் மணி--குடிசைக்கு வெளியே... என்ன ஆச்சரியம்!

மாணிக்கனாரும், அவர் கணக்கப் பிள்ளையும் நின்றுகொண்டிருந்தனர். மணிக்கு ஒன்றும் புரியவில்லை! கணக்கப்பிள்ளை மணியைத் தனியாகக் கூட்டிப்போனார்! காதில் ஏதோ இரகசியமாகச் சொன்னார். கணக்கப் பிள்ளையின் கையிலிருந்த பத்து ரூபாய்நோட்டு மணி கைக்கு மாறியது. "மணி... நினைவிலிருக்கட்டும்.... உன் மனைவியிடம்இதைச்சொல்லாதே!..." கணக்கப்பிள்ளை கடைசியாகச் சொன்னது இது! எல்லாம் சற்று நேரத்தில் நடந்து முடிந்தன! மணி சிலையானான். சிந்திக்க மறந்தான்.

*

விடிந்தது!

ஊரே அல்லோலகல்லோலப்பட்டது. மக்கள் சாரை சாரையாகப் போனார்கள்! அன்றுதானே தேர்தல் நாள்! ஓட்டுப்பதிவு நடந்துகொண்டிருந்தது.

குதிரை வண்டியும், காரும் போட்டி போட்டுக்கொண்டு 'ஓட்டர்களை' அழைத்து வந்தன.

இடைவேளைக்குப் பிறகு!

அவ்வளவு சுறுசுறுப்பில்லை. ஏதோ ஓரிருவர் வந்து ஓட்டுப்போட்டார்கள்! மிகவும் மந்தமான ஓட்டுப்பதிவு நடந்துகொண்டிருந்தது!

மாலை நாலேமுக்கால் மணி இருக்கும்! தேர்தல் முடியும் நேரம்!

இரண்டு உருவங்கள் தள்ளாடித் தள்ளாடி வந்தன! மணியும், மருதாயியும் வந்தனர்! மருதாயியைத் தாங்கிப் பிடித்தவாறு வந்தான் மணி! பக்கத்தில் நின்றுகொண்டிருந்த மாணிக்கனார் பல்லைக் காட்டினார்! கடைசி ஓட்டுகள்! பதிவுசெய்யப்பட்டன. தேர்தல் முடிந்தது!

*

அன்றிரவு! மணி ஏழு!

மணி குடிசையில் உட்கார்ந்திருந்தான். மருதாயி படுத்திருந்தாள்! "மருதாயி... மருதாயி..." என்று மெதுவாக எழுப்பினான் மணி.

விழித்துப்பார்த்தாள் மருதாயி! களைப்பு! இருமல்!

"மருதாயி... நான் கடைவீதி வரைக்கும் போயிட்டு வர்ரேன்"

"எதுக்கு... அத்தான்"

"மருந்து வாங்க"

"மருந்தா...பணம் ஏது அத்தான்?"

"கிடைச்சுது மருதாயி"

"கிடைச்சுதா...? எங்காவது கண்டெடுத்தியா?"

"இல்லே மருதாயி, மாணிக்கனார் கொடுத்தார்"

"மாணிக்கனாரா? போங்கத்தான்... அவருதான் நேத்து இராத்திரி கேட்டதுக்குப் பணம் தரமாட்டேனுட்டாருன்னு சொன்னியே"

"ஆமாம் சொன்னேன்... அதுகப்புறம் வந்து கொடுத்தாங்க..."

"ஏதுக்கு அப்புறம் தந்தாங்க...... நீங்க ஏன்... வாங்கினீங்க"

"ஒண்ணுமில்லே...மருதாயி... நம்ம இரண்டுபேரும்...குதிரைப்பெட்டிக்கு ஓட்டுப்போட்டமல்ல, அதுக்கு!"

"என்ன ஓட்டுக்குப் பணமா? அத்தான் உங்களுக்கு பயித்தியமா என்ன... மானத்தையும் ஓட்டையும் விலைக்கு விக்கக்கூடாதுன்னு நீங்க தானே சொன்னிங்க... உங்களுக்கு சூடு சொரணை இருக்கா"—புயல் வீசியது அவள் பேச்சில்.

"மருதாயி...!"

"என் பேரைச் சொல்லாதிங்க... மருந்து வாங்கப் பணம் கேட்டப்ப கொடுக்காதவருக்கிட்டே ஓட்டுக்குப் பணம் வாங்கினியா... நீ ஒரு மனுஷனா? உடனே கொண்டுபோயி அந்தப் பணத்தை தூக்கி எறிஞ்சுட்டு வாங்க!... போங்க... போங்க... அவரு பணத்திலே மருந்து வேணும்!"

கத்தினாள் மருதாயி! அதற்குமேல் பேச முடியவில்லை. சோர்ந்து விழுந்தாள்! பாழும் இருமல் வந்துவிட்டது! பலமாக இருமினாள்!

மணி சிலையானான். ஒரே குழப்பம்! சிந்தனை சிதறியது! பத்து ரூபாய் நோட்டையும் மருதாயியையும் மாறி மாறிப் பார்த்தான்! அவன் செய்த 'முட்டாள்' தனத்தையும் எண்ணிப் பார்த்தான். 'உரிமையை விலைக்கு விற்காதே' என்ற புரட்சிப் பேச்சாளன் அறிவுரை அவன் நெஞ்சத்தில் மின்னல்போல் பட்டுத் தெறித்தது.

*

மாணிக்கனார் கொடுத்த பத்து ரூபாய் நோட்டை அவரிடமே கொடுத்துவிட்டு அவர் வீட்டைவிட்டு வெளியே வந்தான் மணி. 'மணி... மணி...' என்று கூப்பிட்டார் மாணிக்கனார். அவன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை! பிழைக்கத் தெரியாதவன் என்றார் கணக்கப்பிள்ளை! ஆனால்,

மணியின் மனம் நிம்மதி அடைந்தது. ஒரு பெரிய பாரம், உள்ளத்தைக் குடைந்துகொண்டிருந்த உணர்ச்சி குறைந்தமாதிரி இருந்தது மணிக்கு... பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்ட நல்ல சேதியைச் சொல்ல ஓடினான் மணி, மனைவியிடம்! "மருதாயி! மருதாயி!! பணத்தைக் கொடுத்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு" ஆனால், மருதாயி பேசவில்லை! சந்தேகம்கொண்ட மணி மருதாயியின் உடலைத் தொட்டுப் பார்த்தான். அது சில்லிட்டிருந்தது! அவள் உயிர் உடலைவிட்டுப் பிரிந்து வெகுநேரமாகிவிட்டது! ஒருவேளை, "ஓட்டுகளை விலைக்கு விற்ற கணவன் முகத்தில் விழிக்காமல் போய்விட்டாளோ?"—மணி துடித்தான், அழுது புரண்டான்! கண்ணீர்விட்டுக் கதறினான்!

அவள் செத்து என்ன செய்வது? அவன் அழுது என்ன செய்வது? மறுநாள்... இரண்டே ஓட்டு வித்தியாசத்தில் மாணிக்கனார் வெற்றி பெற்ற செய்தி வெளிவந்தது! ஊர்வலம், மலர்மாலை, மரியாதை! எல்லாம் நடைபெற்றன!

உரிமை முழக்கம் செய்த புதுமைப் பித்தன் அவ்வழியே போய்க்கொண்டிருந்தான் — மணியின் குடிசை நோக்கி—அவனுக்கு ஆறுதல் கூற.

★

பொங்கல் மலர்

சந்தாதாரர்கள் கவனத்துக்கு

இவ்வாண்டுப் பொங்கல் மலரின் விலை ரூ. 1—50 ஆகும். முன் பணமாக ரூ. 1—50 அனுப்புகின்ற சந்தாதாரர்களுக்கு மட்டும்தான் மலர் அனுப்பப்படும்.

பொறுப்பாளர்.

ஆகாது--கூடாது--அடாது

இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு நாடெங்கணும் பரவலாக இருக்கிறது; என்றபோதிலும், தென்னகத்தில் அதற்குப் பெருத்த அளவில் எதிர்ப்பு இருக்கிறதென்பதனைப் பண்டித நேரு அவர்கள் பல தடவை எடுத்துக்காட்டிப் பேசியுள்ளார்.

4—12—60-ல் இராஜ்புரா (பஞ்சாப்)யில் பேசியபோதுகூட,

"ஒரு மொழியைக் கற்குமாறு கட்டாயப் படுத்தக்கூடாது. இவ்வாறு செய்தால் மக்கள் அதை எதிர்ப்பதுடன், மொழிக்கும் தீங்கு விளையும். இதேபோல்,

தென் இந்தியர்கள்மீது இந்தியைத் திணிக்க நான் விரும்பவில்லை."

என்று குறிப்பிட்டுப் பேசியுள்ளார்.

ஆனால், இந்தியைக் கட்டாயமாக எல்லோரும் கற்கவேண்டும் என்ற பிரச்சாரம் சர்க்கார் மூலமாக மிகமிக வேகமாகவும், கண்டிப்பாகவும் செய்யப்பட்டு வருகின்றது.

தில்லியிலுள்ள அமைச்சர்களுக்குள்ளேயே இந்தித் திணிப்புப் பற்றிப் பலவகையான கருத்து வேறுபாடுகள் நிலவி வருகின்றன. உள்நாட்டுத் துணை அமைச்சர் தத்தார் போன்றவர்கள், இந்தியை எப்படியாவது கட்டாயமாகத் திணிப்பதில் முழு ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

இந்த நிலையில், பண்டித நேரு அவர்கள், சமயம் வாய்க்கும் போதெல்லாம், இந்தித் திணிப்புக்கு இடமளிக்கமாட்டேன் என்று கூறிவருகிறார்.

வானொலி நிகழ்ச்சிகளில் இந்திமொழி ஒன்றுக்கு மட்டுமே தனிச் சலுகை தரப்பட்டிருக்கிறது. இந்திப் பாடம் கற்றுத்தரும் நிகழ்ச்சி அன்றாடம் நடைபெற்றவண்ணம் உள்ளது.

தேசிய மொழிகள் என்று தேர்ந்தெடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் மற்றப் பதின்மூன்று மொழிகளுக்கும் வானொலியில் இடமளிக்கப்படவில்லை. ஏன்? இதனைத்தான் "பேச்சு ஒன்று, செயல் இன்னொன்று" என்று சொல்வார்கள்.

இந்த ஆகாதமுறை ஒரு ஆட்சியில் இடம்பெறலாகாது. அதிலும், பேச்சும் செயலும் வெவ்வேறாக இருக்கிறதே என்பதைத் தெரிந்து கொண்டபிறகும், தெரியாததுபோல நடந்துகொள்வது ஆகவே ஆகாது—கூடாது —அடாது.

சில ஆண்டுகளுக்கு முன்னால் 'அங்கோலா'வைப்பற்றிக் கேள்விப்படாதவர்கள், இன்று, அது போர்ச்சுகலின் காலனி ஆதிக்கத்துக்குட்பட்ட ஒரு ஆப்பிரிக்க நாடு என்ற அளவுக்குத் தெரிந்துவைத்திருக்கின்றனர். ஒரு சில மாதங்களுக்கு முன்புவரையில் கூட 'காங்கோ' என்றால் என்ன என்றே தெரியாதவர்கள், தற்போதெல்லாம் காலைப் பத்திரிகைகளை மிக ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள் — அந்த நாட்டின் குழப்பத்தைப்பற்றிய அன்றாடச் செய்தியறிய. அரசியல் உலகின் முழுக் கவனத்தையும் திருப்பி, உலக மக்களது பார்வையில் திடீரெனத் தோன்றிச் சிலகாலம் பத்திரிகைகளின் அன்றாடத் தலைப்புச்செய்திகளாகவும் வரும்; இதுபோன்ற பல செய்திகள் ஒரே நாளில் தோன்றியவையல்ல. உலகமக்களிற் பெரும்பாலோர் கவனத்திற்குத்தான் ஒரே நாளில் தோன்றிப் பளிச்சிடுகின்றனவேயொழிய, அந்தச் செய்தி உருவாகும் மண்ணில் அதற்கான ஆயத்தவேலைகள் ஆண்டாண்டு காலமாகத் தொடர்ந்து நடந்துவந்திருக்கும். அங்கோலாவைப்பற்றிப் பத்திரிகைகளில் தலைப்புச்செய்தி வெளியான அன்றுதான் அந்நாட்டு மக்கள் போர்ச்சுகலை எதிர்த்து விடுதலை கேட்கத் தொடங்கினார்கள் என்பதில்லை. காங்கோவைப்பற்றிஉலக மக்கள் அனைவரும் படித்தபின்னர் அந்நாட்டு மக்கள் பெல்ஜிய ஆட்சியை முறியடிக்கத் தொடங்கவில்லை.

இதுபோல் உலக அரசியல் நடவடிக்கைகளில் முக்கிய பங்கில்லாமலும், பத்திரிகைச் செய்திகளின் முதன் முக்கியத்துவம் இன்றியும், பல நாடுகளது மக்களின் அன்றாடக் கவனத்தை ஈர்க்காமலும், விடுதலைக்காகவும் உரிமைக்காகவும், சம அந்தஸ்துக்காகவும் சகோதர மனப்பான்மைக்காகவும் போராடிக்கொண்டும், முயற்சித்துக்கொண்டும் உள்ள நாடுகள் இன்னும் பல இருந்துகொண்டுதான் இருக்கின்றன.

வளமில்லாத நாடுகள் பல உலக அரசியலில் 'வள'த்தோடு உலவி வருகின்றன. முன்னேற்றமில்லாதவை, முரண்பாட்டுக் கொள்கையுடையவை, மக்கட் கொள்கையில்லாதவை, செல்வநிலை குறைந்தவை

அன்பு

போன்ற நாடுகளெல்லாம் உலகின் கவனத்தில் அவ்வப்போது தோன்றித் தோன்றியேனும் மறைந்துவரும் நிலை பெற்றிருக்கும்போது, அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெற்று, மக்களின் அறியாமை நீக்கி, நாட்டின் வறுமைநிலை போக்கி, பொருளாதார நிறைவடைந்து, தொழிற்சாலைகளையும் உற்பத்தி நிலையங்களையும், போக்குவரவுச்சாதனங்களையும் பல்கலைக்கழகங்களையும், கற்றறிந்தவர்களையும், விஞ்ஞானிகளையும், சரித்திராசிரியர்களையும், கவிஞர்களையும் பெற்று 1,750,000 சதுரமைல் பரப்பில் 4 000,000-க்கும் மேற்பட்ட மக்கட் தொகையைப் பெற்றிருக்கும் மங்கோலியா இன்று உலக நாடுகள் பலவற்றின் கவனத்தினின்றும் கூட அப்பாற்பட்டிருக்கிறது.

தன்னிறைவும், எல்லாத் தகுதிகளும் பெற்றிருக்கும் இந்த நாடு உலக அமைப்பான ஐ.நா.வில் அங்கம் வகிக்கும் உரிமை மறுக்கப்பட்ட நிலையில் இருந்து வருகிறது. காஷ்மீர்ப் பிரச்சினையும் அல்ஜீரிய விடுதலைப்போரும், சீனவிவகாரமும் ஆயுதக் குறைப்புப் பேச்சும் ஆண்டுக்கொருமுறை சடங்கு போல் கருதிப் பேசப்பட்டுவரும் ஐ.நா. பொதுச்சபையில், மங்கோலியப் பிரச்சினையும் தோன்றுவது, தெரியாமல் தோன்றி மறைவது தெரியாமல் மறைந்து வருகிறது. ஆயினும் மக்கள் சீனா ஐ. நா.வில் அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது என்ற உண்மையை அறிந்தவர்கள் 100-பேர்கள் இருப்பார்களென்றால், மங்கோலியாவும் சீனா போல் அனுமதி மறுக்கப்படுகிறது என்ற செய்தியறிந்தவர்கள் 25-பேர்கள்கூட இருக்கமாட்டார்கள். '47-மில்லியன் மக்கள் வாழும் எனது நாட்டில், நான் அறிந்தவரை, இரண்டே இரண்டுபேர்தான் மங்கோலிய மொழியைப் படித்தறியும் தகுதி பெற்றவர்கள்'' என ஆங்கில நாட்டைச் சேர்ந்த ஒருவர் ஆச்சரியத்தோடு குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் மங்கோலிய நாட்டைப்பற்றித் தெரிந்தவர்களின் எண்ணிக்கையே குறைவாக இருக்கும்போது,மங்கோலிய மொழியைப் படிக்கத் தெரிந்தவர்கள் எண்ணிக்கை இரண்டாக இருப்பதில் வியப்பொன்றுமில்லை.

'கல்லும் கவி பாடும்' என்பார்கள். ஆனால் மங்கோலியாவில் திரும்பிய பக்கமெல்லாம் அந்த நாட்டு மண் ஆயிரக்கணக்கான கடந்தகாலக் கதைகள் கூறுமாம். சரித்திராசிரியர்களுக்கும், விஞ்ஞானிகளுக்கும் அவர்களது அறிவுப்பசியைப் போக்கும் பல கிடைத்தற்கரிய செய்திகள் மங்கோலியாவில் நிறைந்து கிடக்கின்றன. மனித இனத்தின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் பங்குகொண்டுள்ள ஒரு சில நாடுகளுள் மங்கோலியாவும் ஒன்று. மனித நாகரிகத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கு மங்கோலியாவும் ஒரு குறிப்பிடமாக அமைந்தது. இன்று உலகெங்கணும் காணப்படும் சிலமுக்கிய மிருகங்கள் மங்கோலியாவில்தான் முதன்முதல் தோன்றியிருக்கின்றன. மங்கோலியர்களது கலைத்திறமும்

அறிவுப்பலமும் சீனா, இந்தியா, ஐரோப்பா முதலிய பகுதிகளின் நாகரிகத்தை இலகுவாக வளப்படுத்திச், சிலகாலம் நாகரிக வளர்ச்சியின் ஒரு பிறப்பிடமாகவும் உச்சிப்படியாகவும் நின்றிருக்கின்றன. இன்று எந்த அமெரிக்கா தனது அதிகார பலத்தாலும், அரசியல் வலிவாலும் மங்கோலியாவுக்கு ஐ. நா-வில் அனுமதியளிக்க மறுக்கிறதோ, அதே அமெரிக்காதான் மக்கட்தொகை வளர்ச்சிக்கு முன்னாளில், மங்கோலியர்களது குடியேற்றமும் ஒரு காரணமாக அமைந்தது. இன்றைக்கு 1500 ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியாவுடன் அரசியல் கலாச்சார வணிகத்துறைகளில் நெருங்கிய உறவு முறைகளைக்கொண்டிருந்த ஒரு நாடு மங்கோலியா. இந்தியத் துணைக்கண்டத்தின் சரித்திரத்தைப் படிக்கும் எவரும் அதில் வரும் மங்கோலியர்களது படையெடுப்புகளைப்பற்றிய செய்திகளைத் தங்கள் கவனத்தில் சொல்லத் தவறமாட்டார்கள். குறிப்பாகக் கூறினால் மங்கோலியர்களது தலைவன் செங்கிஸ்கான் என்பானின் பெயர் எத்தனையோ பல வட இந்திய மன்னர்களுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. செங்கிஸ்கானின் தலைமையின் கீழ் நடந்த பல மங்கோலியப் படையெடுப்புகளால் எத்தனையோ பல டில்லிப் பேரரசுகள் ஆட்டம் கண்டிருக்கின்றன. போர் வெறியிலும் படையெடுப்பிலுமே தங்கள் கவனமெல்லாம் செலுத்திய மங்கோலியர்கள் இறுதியாகப் பதின்மூன்றாம் நூற்றாண்டு முதல் குப்லாய்கான் என்ற தலைவன்கீழ் ஒரு மங்கோலிய முடியரசைத் தோற்றுவித்துக்கொண்டார்கள். பின்னர், முழு அளவில் சீன ஆதிக்கத்தின் கீழும், சிலகாலம் சீனாவின் கீழ் சுய ஆட்சி அமைத்துக்கொண்டும் வாழ்ந்து வந்த மங்கோலியர் 1945-ல் அந்நிய ஆட்சி எதன் கீழும் எந்த அளவிலும் கட்டுப்படுத்தப்படாத ஒரு மக்கள் குடியரசாக மலர்ந்தது.

இன்று மங்கோலியா சோஷலிச அமைப்பைக்கொண்ட ஒரு கம்யூனிச நாடு. அதன் சரித்திரமும் வளர்ச்சியும்,

1. அடிமைத் தளையிலிருந்து விடுதலை.
2. சோஷலிசக் கொள்கைகள்.
3. சோவியத் இரஷ்யா மக்கள் சீனா ஆகிய நாடுகளோடு கொண்டுள்ள பொருளாதாரத்தொடர்பும் அரசியல் நட்பும்.

என்ற மூன்று பகுதிகளில் அடக்கலாம் "மங்கோலியாவின் சோஷலிசக் கொள்கை எந்த நாட்டினின்றும் கடன் வாங்கப்பட்டதுமல்ல; எந்த நாட்டின் அதிகார பலத்தாலும் மேற்கொள்ளப்பட்டதல்ல. அது மக்களால் தங்கள் தகுதிக்கும் விருப்பத்திற்குமேற்ப அவர்களாலேயே உருவாக்கப்பட்டுக் கடைப்பிடிக்கப்பட்டுவரும் ஒரு மக்கள் கொள்கை. இத்தகைய ஒரு சோஷலிசக் கொள்கையின் மூலம்தான் 40 ஆண்டுகளுக்கு முன்பு வரையில், பழம் பெருமைகள் அனைத்தும் களையப்பட்டு, பிணியாலும் வறுமையாலும் அடிமைத் தன்மையாலும் பாதிக்கப்பட்டு அறியாமையிலும் மடமையிலும் உழன்ற மக்கள் இன்று மீண்டும் கலை வளர்த்து, நாகரிகம் பெற்று, தொழிற்கூடங்கள் நிறுவி, பொருள்கள் உற்பத்திசெய்து, அறிவு வளர்ச்சியடைந்து, அரசியலமைப்புகள் கண்டு பழம் பெருமையை மீண்டும் அடையமுடிந்தது" என்று 'பிரிட்டிஷ் அமைதிக்குழு' என்ற ஸ்தாபனத்தின் செயலாளரான ஐ. மாண்டகு என்பார் தாம் நேரில் கண்டவைகளை, மனதில் பதிந்தவற்றை அப்படியேகூறி உளமாரப் புகழ்கிறார். இதனால்தான், இரஷ்யா சீனா ஆகிய நாடுகளின் பொருளாதாரஒத்துழைப்புகளையும், அரசியல் உறவு முறைகளையும் பெற்றிருந்தபோதிலும், மங்கோலியா, கம்யூனிச நாடுகளுள் ஒருவிதத் தன்மை கொண்ட நாடாகத் திகழ்ந்து வருகிறது.

பஞ்சம்!
எதிலும், எதற்கும், பஞ்சம்!!

இந்நாட்டின் பல பகுதிகளிலும் மருந்தில்லாத மருத்துவ நிலையங்களும்; மருந்திருந்தால், மருத்துவர் இல்லாத மருத்துவ மனைகளும் உள்ளன என்ற புகார் நெடுங்காலமாகப் பேசப்பட்டு வருவதை நாம் அறிவோம்.

இப்போது, டில்லியிலுள்ள உடல்நலப்பாதுகாப்பமைச்சர் நாம் மேலே குறிப்பிட்டிருப்பதை வலியுறுத்தும் முறையில் பேசியுள்ளார்.

> "தற்போதுள்ள வைத்தியக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை இருமடங்காக உயர்த்தினாலும்கூடப் பயிற்சி பெற்ற டாக்டர்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை ஈடுசெய்ய முடியாது"

என்று 4—12—60-ல் ஐதராபாத்திலுள்ள இந்திய வைத்ய விஞ்ஞானக் கல்லூரியில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் முறை இருக்கிறதே, அது, இனியும் அந்தப் பக்கம் திரும்பியும் பார்க்கக் கூடாதென்று அந்த மாணவர்கள் வேதனைப்படுமளவுக்குக் கண்டிப்பும் கடுமையான முறைகளும் இருந்து வருவது கண்கூடு.

இந்த நிலையில், போதிய அளவு மருத்துவர்கள் கிடைக்கவில்லையே என்று அங்கலாய்ப்பதில் பயன் யாதுளது?

உணவுப் பஞ்சத்திலிருந்து மருந்துப் பஞ்சம் வரை (ஆள் பஞ்சம் தவிர) நாட்டில் நாளுக்கு நாள் வளரும் நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கும் இந்த வேதனை தீருவது எப்போது?

பதிவு எண். எம். 4642 | தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 / இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

உறுப்பு நாடாக ஐ. நா. வில் அமரும் வாய்ப்பு, தனக்கு அளிக்கப்பட்டால், அதன் சட்டதிட்டத்திற்குட்பட்ட ஒரு அமைப்பாக இருந்து மங்கோலியா பணியாற்றும் என்ற கோரிக்கையை அந்த நாடு 1946-ம் ஆண்டு ஜூன் திங்களில் முதன் முதல் எழுப்பியது. ஆனால் கடந்த பதினான்காண்டுகாலமாக அனுமதி மறுக்கப்பட்டு உறுப்பினராகும் வாய்ப்பை ஒவ்வொரு ஆண்டும் இழந்து வருகிறது அந்த நாடு. 1955-வது ஆண்டு நடந்த ஐ. நா. வின் பத்தாவது பொதுச்சபைக் கூட்டத்தின்போதும் 52 நாடுகளால் ஆதரிக்கப்பட்ட மங்கோலியாவைப் பற்றிய தீர்மானம் பாதுகாப்புச் சபையில் நிறைவேறாமல் போன காரணத்தால், அந்த ஆண்டும் தோல்வியுடன் கைவிடப்பட்டது. இப்போது நடந்துகொண்டிருக்கும் ஐ. நா. பொதுச்சபையின் 15-வது கூட்டத் தொடரின் ஆரம்பத்தில்கூட, மங்கோலியா ஐ. நா. வில் அனுமதிக்கப்படவேண்டும், என்ற நியாயக்குரல் இரஷ்யா, இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளின் பிரதமர்களால் முழக்கப்பட்டது. 14 புதிய நாடுகளுக்கு இடமளித்து எண்ணிக்கை பலம் அதிகரித்துள்ள ஐ. நா. வில் வழக்கம் போல் இந்த ஆண்டும் முடிவு எதிர்பாராமல் மங்கோலியப் பிரச்சினை கொண்டுவரப்பட்டுள்ளது.

அமெரிக்காவும் அதன் மற்றைய சார்பு நாடுகளும் மங்கோலியா ஐ. நா. வில் அனுமதிக்க மறுப்பதின் முக்கிய நோக்கம், அந்த நாடு அகில உலக அரசியல் விவகாரங்களில் போதுமான "அனுபவமின்மை"யும், மற்றைய நாடுகளோடு உறவுத்தொடர்புகள் ஏதும் கொள்ளாமையும்தான் என்பது வெளிப்படையாகக்கூறப்பட்டு, எல்லோரும் அறிந்த காரணங்கள். ஆனால், எல்லோரும் அறிந்த உள்நோக்கம் இதுதான: "ஐ. நா. வில் மங்கோலியாவின் நுழைவு கம்யூனிச நாடுகளின் பலத்தை அதிகப்படுத்திவிடும்."

இரஷ்ய வாரப் பத்திரிகையொன்றில், தான் எழுதியுள்ள கட்டுரையொன்றின் மூலம் இந்த இரண்டு காரணங்களுமே நியாயத்தின் அடிப்படையில் கூறுவதல்ல என்றும், உண்மைக்குப் புறம்பானவை என்றும் கூறி அமெரிக்காவின் வாதங்களை மறுக்கிறார் மங்கோலியக் குடியரசின் வெளிவிவகார அமைச்சர் ஒருவர் (P. Shagdar-suren). மங்கோலியாவின் வெளிநாட்டுத் தொடர்புகள் ஆண்டுக்காண்டு அதிகரித்துவருகிறது என்றும், ஆசிய, ஆப்பிரிக்க, ஐரோப்பிய நாடுகளிடையே மங்கோலியா கொண்டுள்ள உறவுகள் நாளும் பெருகி வருகிறதென்றும், உலகின் பாதிக்குமேல் மக்கட்தொகையைக் கொண்ட நாடுகள் பல மங்கோலிய மக்கள் குடியரசை ஒரு நாடாக ஒத்துக்கொண்டுள்ளன என்றும் அவர் அக்கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு ஜப்பான், இத்தாலி, ஆஸ்திரியா, கனடா மற்றுமுள்ள நாடுகளிலிருந்து மங்கோலியாவுக்குப் பார்வையாளர்களாகச் செல்லும் விஞ்ஞானிகள், அரசியல் தலைவர்கள், பத்திரிகையாளர்கள் முதலியோர்களின் தொகை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதும், இருபதுக்கு மேற்பட்ட சர்வதேச அரசியல்மைப்புகளில் மங்கோலியா அங்கம்வகித்துவருவதும், மங்கோலியா அரசியலனுபவமற்ற நாடு என்ற எதிர்வாதத்தைப் பொய்ப்பிப்பதாக உள்ளது—என்று அந்த அமைச்சர் ஆதாரங்களோடு குறிப்பிடுகிறார்.

மங்கோலியா ஐ. நா. வில் இடம் பெறவேண்டும் என்ற நியாயக் குரலை குருஷ்சேவும் நேருவும் கொய்ராலாவும் இன்னபிற தலைவர்களும் எழுப்பியதோடல்லாமல், ஆசிய ஆப்பிரிக்க மக்கள் தனித்தன்மை மாநாடு, ஆசிய ஆப்பிரிக்க வழக்கறிஞர்கள் மாநாடு, ஆயுதக் குறைப்புக்கும் கூட்டுறவு முறைக்குமான உலகக் காங்கிரஸ், அணு ஆயுதக் குறைப்புக்கான நான்காவது உலக மாநாடு, அராபிய லீக் கவுன்சில் போன்ற சர்வதேச அமைப்புக்கள் மங்கோலியா ஐ. நா. வில் இடம் பெறவேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றி ஆதரவு தந்துள்ளன.

இருந்தும் இதுவரையில் மங்கோலியா ஐ. நா. வில் இடம் பெறும் 'தகுதியற்ற' நாடாகக் கருதப்படுகிறது. ஒரு சில நாடுகளால் அமைதி மறுப்பதை அந்த நாடுகள் ஒரு 'சடங்காக'க் கருதிக் கடைப்பிடித்து வருகின்றன. பேராபத்தைத் தடுக்கவும், சில சங்கடமான சூழ்நிலைமைகளைத் தவிர்ப்பதற்கும் பயன்படும் 'வீட்டோ' அதிகாரம் மங்கோலியாவுக்கு இடமளிக்க மறுப்பதற்கும், மக்கள் சீனா ஒரு நாடா என்று கேட்பதற்கும்தான் இன்று பயன்பட்டு வருகிறது. உலக அமைதிக்கென்றே உருவாக்கப்பட்ட ஒருலக அவையில் இதுபோன்ற உயர்வு தாழ்வுகள் கற்பிப்பது, இரஷ்யப் பிர்தமர் குருஷ்சேவ் கூறியிருப்பதுபோல், அமைதிக்கே அழிவு விளைவிப்பது; ஐ. நா. வின் அமைப்புக்கே கேடு பயப்பது.

தனக்கு ஐ. நா. வில் அங்கம் வேண்டுமென்று இன்று மங்கோலியா எந்த நாட்டை நோக்கியும் இரக்கவில்லை. தனக்கு இருக்கும் தகுதியைக் காட்டி, உரிமையை எடுத்துக்கூறி மனித இனத்தை நோக்கி வன்மையோடு வினவுகிறது—தனக்குரிய இடம் அளிக்கப்படவேண்டுமென்று. மங்கோலியாவின் நியாய வேட்கையைப் பிரதிபலிக்கும் குரல் ஐ. நா. வில் நாளும் வளர்ந்து வலிவு பெற்று வருவதொன்றே, எதிர்காலத்தில் அந்நாடு ஐ. நா. வில் இடம் பெறலாம் என்ற நம்பிக்கை ஒளியைத் தருகிறது. ஏனெனில், மனித இன நல்வாழ்வுக்கென்றே தோற்றுவிக்கப்பட்டிருக்கும் ஐ. நா. வில் மங்கோலியா போன்ற நாடுகள் சமஉரிமை மறுக்கப்படுவதை, அங்கு வளர்ந்துவரும் முற்போக்குச் சக்திகள், இனியும் அனுமதித்துக்கொண்டிருக்காது.

*

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.